44

OFFICE OF THE ...
7 OCT 1959
MADRAS



# சம்பூரண இராமாயணம்

## ஒயிற்கும்மிப் பாடல்கள்.

Total pages. 60
ACESSNO: 102115

தொகுத்தது :

உடுமலைக்கடத்தூர்,

மே. நா. முத்துவீரப்ப முடிராஜ்.

ஸ்ரீ கணபதி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1952.

0-785
N52
102115

# சம்பூரண

# இராமாயணம்

## ஒயிற்கும்மிப் பாடல்கள்.



OFFICE OF THE ...
7 OCT 1952
MADRAS

தொகுத்தது :

உடுமலைக்கடத்தூர்,

மே. நா. முத்துவீரப்ப முடிராஜ்.

102115
MADRAS-600
O-,85
N52



காட்டுப்புத்தூர் ஜமீன்தார் உயர்நிலைப்பள்ளி

## வித்துவான், சேந்தை திரு. ரா. மாணிக்கவாசகம்

தலைமைத் தமிழாசிரியர் அவர்கள் அன்புடன் வழங்கிய

# மதிப்புரை.

---

முத்துவீ ரப்ப முடிராசன் பேசுதமிழ்
ஒத்த ஒயிற்கும்மி ஓதியதைப் — பத்தியுடன்
பாடியே ஆடிப் பழையநாட் டுப்பாடல்
நாடியே கொள்வீர் நயந்து.

கும்மி படித்துக்கூத் தாடிடுவீர்! — ஒயில்
கும்மியைச் செம்மையாய்ப் பாடிடுவீர்!
உம்மை நலியறி யாமைகள் ஓட்டியே
உண்மை வழிகண்டு வாழ்வீரே!

சேந்தை. ரா. மாணிக்கவாசகன்.
20—9—52.

# முன்னுரை.

கலைகளிற் தலைமைத்தாய பரதநாட்டியக்கலை, மக்களுக்கு மகிழ்ச்சி யளித்துப் புத்துணர்வு பெறச்செய்யும் ஓர் அருங்கலை. அதன் உட்பகுதி களிலொன்றான, **"ஒயிற் கும்மியாட்ட"** மெனப்பெயர் பெறும் நடனக் கலையானது, ஒரு கதையை பாடல், வசனம், அபிநயம், ஆட்டம் முதலிய வைகளுடன் ஒருங்கு சேர்த்துப் பாடி யாடி, மக்களைக் களிப்புறச் செய்வ தாகும்.

மாடமாளிகை கண்ட சிறுமதலைகள், மணலாற் சிற்றில் உண்டாக் குவது போல், பாடல் வசனங்களினால் **"சம்பூர்ண இராமாயண ஒயிற் கும்மிப் பாடல்கள்"** என்ற மிகுதியும் பழக்க வழக்கச் சொற்களா லாய, கிராமியப் பாடல்களால் இந்நூலைத் தொகுத்துள்ளேன். என்னுள்ளே, எஃதோ ஒரு சக்தியின் தூண்டுதலாலே, இந்நூலை இயற்றத்துணிந்தனன் போலும்.

ஆதலின், இதனைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்வீர்களென்றும், காலத்துக்கேற்ற இன்னும் பல நூல்களியற்ற ஊக்குவிக்க வேண்டுமென்றும், பணிவுடன் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இந்நூலியற்ற விரும்பியவர்கள், முசிரி வட்ட தொட்டியபட்டி நிலக்கிழார் திரு. P. காமா நாயக்கர் அவர்களும், ஒயிற் கும்மியாட்ட உபாத்தியாயர் திரு. P. திருமலைசாமியவர்களும், மற்றும் ஆண்டுறையுந் தோழர்களுமே!

இந்நூல் அச்சேறி வெளிவர உதவிய மேற்கூறிய பெருந்தகைகளுக்கும், நான் பெரும்பிணியால் அல்லல்பட்டவமயம், தமது மருத்துவத் தால் என்னைமீண்டும் உலகுய்யுமாறு, இப்போதுள்ள உடலைத் தந்த தந்தையுந் தாயுமான அன்புமிக்க தோழர் திரு. K. R. K. ஞானவடி வேல் (L. H. M.) டாக்டர் (வேல்மணி மந்திர ஹோமியோ & சித்த வைத்தியசாலை கணியூர், P. O. வயா, மடத்துக்குளம் S. I. R.) அவர் களுக்கும், மற்றும், அது சமயம் பல வழிகளில் உதவியளித்த, பின் பக்கத்தில் கண்டுள்ள நன்கொடை அன்பர்களுக்கும், இந்நூலைப் பதிப்பித்துத் தந்த குளித்தலை **"ஸ்ரீ கணபதி அச்சகத்தாருக்கும்"** மதிப்புரை வழங்கிய காட்டுப்புத்தூர் ஜமீன்தார் உயர்நிலைப்பள்ளி தலைமைத் தமிழாசிரியர், வித்துவான் சேந்தை திருவாளர் ரா. மாணிக்க வாசகம் அவர்களுக்கும், எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரி வித்துக் கொள்ளுகின்றேன்.

அன்பன்,

சிலைப்பிள்ளையார்புத்தூர்
20—9—52.

**மே. நா. முத்துவீரப்ப முடிராஜ்.**
ஆசிரியன்.

# சம்பூரண இராமாயணம் ஒயிற்கும்மிப் பாடல்கள்.

### விநாயகர் துதி — காப்பு வெண்பா.

சீர்மேவு மைங்கரன் செட்டிக்கு மூத்ததிரு
ஏரம்ப னுமுக்கண் ஈசனருள் — தார்பூணுஞ்
செம்மலைப் போற்றியே சம்பூர்ண ராமகதைக்
கும்மிதனைப் பாடுவோங் கூர்ந்து.

### கலைவாணி துதி — வெண்பா.

வெண்டா மரையாள் வியன்வெண் புடவையாள்
எண்டிசையும் போற்றும் இசையொளியாள் — தண்டமிழால்
ராமா யணக்கும்மி நான்பாட மாசற்ற
பாமாலை தந்துவப் பாள்.

### அவையடக்கம் — வெண்பா.

இறைவன் வழிபாடு எத்துணை யோவுண்
டறைந்தன் இசையினுல் அவ்வா — றுரைத்தநல்
புண்யகதை யாமிருப்ப போகசுக முற்றுநரர்
மண்மீது வாழ்தலா மாறு.

### நூல் — கும்மிச்சந்தம்.

யானைமுகத்து விநாயகனே — உமை
யான சத்திபெற்ற பாலகனே
மோன முத்தமிழ்க்கு வல்லவனே — ராம
நாம கதைக்குன் துணைபுரிவாய்.

பாரதியான கலைவாணி — உந்தன்
பாதமதே கதி நீயருள்வாய்.
காலதேவன் நம்மை வாட்டுதலால் — மிடி
காரணமாகவே பாட வந்தேன்.

பார ராமாயணக் காதையைத் — தமிழால்
பாடவே நாவிற் குடியிருப்பாய்.

சாலவே பாடினே னேட்டினளவிலே
சாற்ற முன்வந்ததில் தவறுமுண்டோ.

பூமியைம் பத்தாறு தேசமெல்லாம் — புகழ்
ஓங்கிடு மயோத்தி யாபுரியை
ஏகச் சக்ராதி பதியாந் தசரதன்
ஈடுயிணையில்லா தாண்டு வந்தான்.

போக மிருந்தென்ன பூமியை ஆண்டென்ன
புத்திரனில்லாக் குறையாலே
நாமெடுத்த சென்மம் சாபல்யம் — ஏதென்று
நாளும் மனதினில் துன்பமுற்று.

மெத்த விசனமாய் மனமதும் — நொந்து
வேதனை கொண்டுறும் நாளையிலே
நத்தியே தன்குல குருவ சிஷ்டரை
நாடியே வணங்கிச் சொல்லலுற்றார்

மாதவத்தோரே குல குருவே — எங்கள்
வம்சத்தைக் காத்திடும் மாமுனியே
மைந்தனில்லாத குறையதனால் — நம்ம
வம்ச மெப்படி விளங்கிடுமே.

சொன்ன விநயமதைக் கேட்டு — குரு
சொல்லுகிறார் பின்னும் விள்ளுகிறார்
மன்னுகலைக் கோட்டு மாமுனியைக் கொண்டு
வந்தாலே உன் குறை தீர்ந்திடுமே

மாரியும் பெய்யும் நிலஞ் செழிக்கும் — யாகம்
வேத விதிப்படி செய்வோ மானால்
பேருந் துலங்கிட புத்திர பாக்கியம்
பெற்றிடு வாருந்தன் பத்தினிமார்

அப்படியே அது நல்லதென்று — சொல்லி
சக்கரவர்த்தி கலை முனியை
ஒப்பியே கொணர்ந்து யாகசாலையினில்
ஓமம் வளர்த்துமே யாகம் செய்ய

9

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலன
ஸ்ரீமந் நாராயண மூர்த்தி யுந்தான்
தக்கதொரு பூதம் போலவே பாயாசம்
தந்துதவ மங்கை உண்டனரே.

காதலி மூவ ரவிர்ப்பாகம் சாப்பிட்ட
கால முதலாகக் கர்ப்ப முற்றே
நீதமுடன் ராம லக்குவன் பரதன்
நீடுஞ் சத்ருக்கனு தித்தனரே.

சொல்லும் புனர்பூசம் ராமனுமே — பூசம்
விள்ளுவதுமே பரதனுக்காம்
வல்ல சத்துருக்கன் சோதியாகும் — இளைய
லக்குவனுக்குமே ஆயில்யமாம்.

கூர்சுபயோக சுபதினத்தே நால்வர்
பாரும் புகழப் பிறந்தனரே!
ஆர்வமொடு கல்விகேள்வி தனுர் வித்தை
அட்டியில்லாதுமே கற்று விட்டார்.

தங்குல குரு வதிஷ்டரும் மெச்சவே
சாஸ்திரங்கள் பல கற்று விட்டார்
சந்ததம் கும்மியே பாடும் முத்துவீரன்
செந்தமிழ் தன்னிற் சிறந்து விட்டார்.

**தசரதர் வசனம்:** என் அன்பிற்குரிய குருஸ்வாமி! நமது மைந்தர்கள் நால்வரும் தங்களது கிருபாகடாக்ஷத்தினலல்லவோ சகலவித கல்வி கேள்விகளிலும் தனுர்வித்தைகளிலும் பயின்று இந்நிலைக்கு வந்திருக்கின்றனர். எல்லாம்தங்களது திருவுள்ளம்.

**வசிஷ்டர் வசனம்:** ராஜன்! எல்லாம் சர்வவல்லமையுள்ள ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் திருவருள் செயலன்றோ!

**தசரதர் வசனம்:** ஸ்வாமி! சரணம், வாருங்கள், தர்ப்பாசனத்தில் அமருங்கள். தாங்கள் இன்று திருவுளம்பற்றி இங்கு எழுந்தருளியது, இந்த அயோத்திமா நகர் செய்த பூர்வபுண்யமோ, நான் செய்த பூஜா பலமோ அன்றி ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் வரப்பிரசாதமோ அறியேன் ஸ்வாமி!

**கோசிகர் வசனம்:** தசரதா! என்போன்றோர்க்கு ஏதாவது இடையூறு நேர்ந்தால் சிவசிவா என்று கைலை போவோம். சத்ய லோகம் புகுவோம். திருப்பாற்கடலிற் கண்வளரும் ஸ்ரீதரனிடம் செல்வோம். அல்லது இந்த அயோத்தியில் பிரவேசித்தும் குறைதீர்வோம். அல்லாது வேறெங்கு செல்வோம்.

**தசரதன் வசனம்:** ஸ்வாமி! தங்களுக்கு ஏற்பட்ட அப்படிப் பட்ட இடையூறு என்ன? தெரிவியுங்கள். உடனே அதை செய்து விட்டு மறுகாரியம் பார்க்கிறேன்.

**(அறுசீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)**

சீரணிய யோத்திநக ரொருகுடையி லாக்ஷிசெய்
செம்மலே தசரதாகேள்
பாரினில் அசுரர்செய் பாதகங் களையவே
பதுமநா பனுமுதித்த
காரண மாமிகும் ரகசியம் ஆதலால்
கனதவம் பூர்த்தியாகக்
கோறினே னுனதுமகன் ராமனை என்பினே
குணமுட னனுப்புவாயே!

**பாட்டு.** (2 தரு. தாரணியோர் புகழும் என்ற சந்தம்)

தானதர்மங்கள் தன்னையே — தந்துதவும் — தசரதனே
சந்ததம் ராமனை என்பின்னால னுப்புவாய்
மாதவ முனிவரரே — மகன் ராமன் — சிறு பாலன்
வந்துமக்கு செய்வதென்ன விந்தையிதுவே
நான் செய்யும் யாகங்களை — கெடுக்கவரும் — அரக்கர்களை
நாட்டமுடன் கொன்றிடவே கேட்டேன் ராமனை
மலைபோலு மரக்கரையே — அருமதலை — சிறுபயலென்
மகனான ராமன் கொல்ல வலிமை யுண்டோ
தேவாதி தேவர்களெல்லாம் — எனது சொல்லை — மீறியதில்லை
சித்தத்தில் துணிந்து தட்டிச் சொல்கிறாய் சொல்லை
எந்தவித காரியத்துக்கும் — இந்த க்ஷணமே - வந்தரக்கரை
கொன்றெமலோக மனுப்பி வேள்வியை காப்பேன்

ராமனே அனுப்பு என்றேன் — சிறுவனென்றும் — வருவேனென்று
சொல்லினையே பார் என்றுமே சீறி நடந்தார்
கோபத்துடன் செல்லுவதை — குலகுருவும் — உடனுக்குடன்
கூட்டிவரச் சொல்லி சொன்ன குற்றத்துக்காக
ராமனுடன் லக்குவனையும் — ஒருவனுக்கு — இருவராக
இட்டுக்கொண்டு போங்களென்று தொட்டனுப்பினர்
கோசிக முனிவர் பின்னே — ராமன் செல்ல — லட்சுமணனும்
கோரவனந் தன்னி லேகி வழி நடந்தார்
களைப்புடன் மயக்கம்பசி — அவரடையா — உபதேசம்
கற்று வித்துக்கூட்டியாக சாலையை நாடி
ஓமகுண்டம் வளர்த்திடும்போ — தோடி வந்தாள் — தாடகையே
ஒப்பில்லா நெருப்புபுகை யொளி யெழும்ப
ஏதடா சிறுபயல்களே — என்னைக் கொல்லவே — உமக்கு வலி
உண்டோடா இதோ உங்களை விழுங்குரேன் பார்
என்றலுமே ராமன் பார்த்து — லக்குமணனே — தக்கதல்லவோர்
பெண் பிள்ளையைக் கொல்லுதலும் நீதியல்லவே
என்றசொல்லை முனிவர் கேட்டு - உருவம் பெண்தான்-பெரும்பாதகி
யோசனை செய்யாமல் கொல்லப்பாணந் தொடுப்பாய்
வில்லெடுத்து நாணி தொடுத்து—ராமன் விடுத்த – பாணத்தினலே
வீழ்ந்து மடிந்தனளே தாடகை மண்மேல்
தாயிறந்த செய்தி கேட்டு — ஓடிவந்த — சுபாகுவையும்
சட்டென ஓர் அம்பி லெமலோகமே சேர்த்தார்
மற்றவர்க்கும் அறிவித்திட — மாரீசனை — யூனம்பண்ணி
வைத்து விட்டார் முத்துவீரன் செந்தமிழ் காண.

### விருத்தம்.

தாடகை மடிந்த பின்பு யாகமும் பூர்த்தி யாக
வாடாகண் மணிகா ளென்று மார்புறத் தழுவி வாழ்த்தி
நீடுவில் விழாவுங் கண்டு திரும்பியே வருவோ மென்று
காடடர் மிதிலைப் பாதை கல்லெனும் பெண்ணைக் கண்டார்.

### பாட்டு. 3 தரு. (கோசிகமாமுனியே என்ற சந்தம்.)

பாததூளி பட்டெழுந்த பாவை யிவள்யாரு
பாவை யிவள்யாரு — அதை — பகருவீரிப்போது

என்றுசொன்ன ராமனையே கோசிகரும் பார்த்து
கோசிகரும் பார்த்து — கதை — சொல்லச் செவிஎற்று
கௌதமரின் பத்தினியா மகலிகை இம்மாது
அகலிகை மேலிந்திரனும் ஆசைகொண்ட போது
முனிவரில்லா வேளையிலே முனிவர்போலே வேடம்
முனிவர்போலே வேடந்தாங்கிக் கூடினு னக்காலம்
கௌதமரும் வந்திடவே இந்திரனும் அஞ்சி
இந்திரனும் அஞ்சியொரு பூனையுரு வானான்
பூனையுமிங்கேது வென்று ஞானத்தினால் கண்டு
யோனிக்கண்கள் ஆயிரமேயாக வெனச் சபித்தார்
கல்லாகப் போவதென மாதிவளை சபித்தார்
காலடியும் பட்டதாலே மாது உருப்பெற்றாள்
கௌதமரின் இடத்தினிலே அகலிகையை விட்டு
கடுகிநகர் மிதிலை தன்னைக்கண்டு சபைகிட்ட
ஜனகராசன் இவர்களுடன் முனிவரையும் பார்த்து
சந்தோஷமாக வரவேற்று உபசரித்தார்
சீர்மிகும் அயோத்தி நகர் தசரதனின் புதல்வர்
சிறுவரினால் பாதகியாந் தாடகையும் மாண்டாள்
செய்தயாகம் பூர்த்தியாக செயலதுவும் புரிந்தார்
செந்தமிழ் செய்முத்துவீரன் சொல்மிதலை விரைந்தார்.

**பாட்டு முடுகு.** (பாருடப்பா என்ற சந்தம்)

சத்திய குணஜனக சம்பன்னனே நீயே
நத்திடும் சிவதனுசை கொணரச் சொல்வாயே
ஏழாயிரம் கிங்கரர்கள் எடுத்து வந்தாரே
இந்தவில்லை ராமனே எடுத்து வளைப்பாயே
என்றவுடன் பாலராமன் எழுந்து வந்தானே
எடுத்துவளைக்கப் படீர் என்று ஒடித்தானே
மன்னர் மன்னர் சபையோரும் மகிழுடன் கொண்டாட
வாழ்த்துக் கவி முத்துவீரன் பாமாலையேசூட.

**வேறுசந்தம் பாட்டு.**

அச்சணமே மணவோலை அனுப்பித்து வைத்தாரே
அங்கிருந்த தந்தைதாய் சிந்தைபூ ரித்தாரே
குடிஜனங்கள் எல்லோரும் கொண்டாட்டம் கொண்டாரே

குலவியே சேனைசைன்ய பயணமாய் வந்தாரே
மிதுலைநகர் கல்யாண மண்டபத்தில் நுழைந்தாரே
விமரிசையாய் நால்வருமே மணக்கோலங் கொண்டாரே
தேவர்களும் முனிவர்களும் வாழ்த்தி மலர்தூவிடவே
சீர்வரிசை பாவாணர் பாமலர்கள் சூடிடவே
மங்களாகாரஞ் செறியத் தம்பதிகள் நால்வருமே
பொங்குமகிழ்பெற் றயோத்தி போந்தாரே கூட்டமுடன்
சீறிவந்த பரசுராமன் கெர்வபங்கம் அடைந்தானே
சீராமனை குணதீரனடி சேர்ந்தானே
அயோத்திமா நகரை அடைந்தாரே சுற்றமெல்லாம்
அன்புடன் செங்கோலாட்சி அடைந்தார்கள் மக்களெல்லாம்

**தசரதன் விருத்தம்.**

பரந்தநா டதனைச் செங்கோல் பற்றியே ஆண்டு வந்தேன்
துறந்தெனை தாட்சி நீக்கித் துறவறத் தவமேற் கொள்ள
விரும்பினன் குருவே நமது விஜயரா மனுக்குப் பட்டம்
விரைந்துமே செய்ய மனதே விழைந்தனன் கருணை செய்வீர்.

**தசரதன் வசனம் :-** ஸ்வாமி எங்கள் குலகுருவான மஹா சிரேஷ்ட முனிபுங்கவரே யான் முதுமைப் பருவம் அடைந்ததினால் சிம்மாசனம் ஏறிச் செங்கோல் செலுத்த சக்தியற்றவனாக இருக்கின்றேன். ஆதலின் நமது சிரேஷ்ட புதல்வன் ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துவிட்டு, பின்பு நான் தவமேற்செல்ல எண்ணுகின்றேன் தங்களது அபிப்பிராயம் என்ன ஸ்வாமி!

**4. தரு. (பாட்டு. நொண்டிச்சிந்து)**

எங்கள் குருமூர்த்தி கேளீர் — நமது
மங்கள ராமனுக்குப் பட்டாபிஷேகம்
செய்திடவே எண்ணங் கொண்டேன் — அதில் நான்
உய்திடவே வழியும் உரைப்பீரையா
அப்படியே ஆகட்டுமென்று — ராமனிடம்
செப்பியே அழைத்து வந்தார் ராஜசபையில்
ராமனே உந்தன்பிதா — உனக்கு
தாம முடிகொள்ளும் பட்டம்தான் வழங்க
நினைக்குறார் உந்தன் எண்ணம் — சொல்வாய்

மனத்தினில் உள்ளதையே வழுத்திடுவாய்
என்ற குரு சொல்லைக்கேட்டு — ராமன்பல
எண்ணியே நின்றுனென்றும் சொல்லாமலே சென்றுன்
சித்திமுனிவரும் பார்த்து — ராமன்
புத்திசாலியல்லவோ நல் சக்கரவர்த்தி !
வாய்விட்டு வேண்டுமென்றுல் — இந்த
மண்ணுசை வெளிப்படும் ஆதலினுல்
வேண்டாம் என்று சொன்னுல் — தந்தை
வேதனை கொள்வாரதனுல் நின்றுன் சென்றுன்
ஆதலால் தசரதாகேள் — பட்டத்திற்கு
ஆகுங்காரியங்களெல்லாம் ஆகட்டுமென்க
நல்லதோர் சுபநாளும் — குறித்தார்
எல்லார்க்கும் ஓலை கொடுத்தே யனுப்பினுர்
சமயம் இதுதானென்று — தோழியான
கூனியும் கைகேயினிடம் கோள்களும் சொல்லி
முன்சொன்ன வரம் ரெண்டிலே — ராமனை
ஒன்றிலே வனம் போகவும் மற்றென்றினிலே
பரதன் பட்டம் கொள்ளவும் — இப்படி
பகர்ந்திடத் தசரதன் வரும் போதில்
தலை விரிகோலமதாய் — கைகேசி
தரையினில் வீழ்ந்துருண்டு புலம்புவதை
பார்த்துனக்கு என்னவேண்டும் — என்க
பன்னியவாம் ரெண்டையும் இன்றுதாராய்
என்றவுடன் தருவேனென்று — சத்தியம்
சொன்னவுடன் பரதனுக்குப் பட்டம் வேண்டும்
ராமன் பதினுலு வருஷம் — வனத்தில்
நாடிடவே வேண்டுமென்ற சொல்லைக்கேட்டு

## தசரதன் விருத்தம்.

மாதேஎன் கைகேசி மானேஈ தென்ன சூது
ஏதேது ஈதுபாயம் இதுசொல்லித் தந்தார் யாரு
கோதயேவேண் டாம்நீயே கோறின வரமே தாரேன்
நீதன்றே நமதுராமன் வனஞ்செல்லல் சரியோ கண்ணே !

**தசரதன் வசனம் :** அடி என்மானே! கைகேசி! நீகேட்ட படியே வரம் ரெண்டில் பரதனுக்கு பட்டம் ஒன்று இரண்டாவது வரம் வேறெதாவது கேள். ராமனைமட்டும் வனம்போக விரும்பாதே! கண்ணே! அவன் பேரில் நீவைத்திருந்த அன்பெல்லாம் எங்கே போச்சு!

**கைகேசி வசனம் :** அந்த நாள் கொடுத்த வரம் ரெண்டையும் இன்று நான் கேட்கப் போகும்போது நீர்தருவதாகச் சத்தியம் செய்து விட்டு இப்படி மறுத்துப் பேசுதல்தானே சூரிய குல ஒழுக்கம் இதுதான் ராஜ நீதியா! சரி கொடுத்தால் கொடும். இல்லையேல் விடும்.

**பாட்டு 5-வது தரு.** (மங்கையே மடமயிலே என்ற சந்தம்)

கண்மணியே வேண்டாமடி சூது — இந்த
காசினியோ ரேசுவார் தப்பாது — சொல்லிப்போது
பதினாலு வருஷமும் காட்டில் — ராமன்
பரதவித் திடுவான் முள்மேட்டில் — ஏற்பாட்டில்
ராமனைப் பிரிந்து உயிர்வாழேன் — உந்தன்
பாதத்தை கும்பிடுறேன் வேண்டாம் — இதுவேண்டாம்
சூரிய குலத்தில் உம்மைப்போலே — உன்போல்
சொன்ன சத்யம் தவர்ந்தார்யாரே — பதில்கூறே
ஏண்டி பெண்ணுருவாய் வந்தபேயே — மனம்
கொஞ்சமும் ஈரமில்லையோ நாயே — சொல்லுவாயே
என்று மூர்ச்சையாய் விழுந்தபோதே — சுமந்திர
மந்திரியை கூட்டிவாதப்பாதே — புவிமீதே
என்றலுமே மந்திரியால் ராமன் — வர
சுந்தரராமனே சேதி கேளாய் — வெகுநாளாய்
சக்ரவர்த்தி எனக்கு ரெண்டு — வரம்
தந்தாரே பரதன் பட்டம்ஒன்று — மிகநன்று
இத்தினமே பதினாலு ஆண்டு — வனம்
நீயுமேக வேணுமே வேறொன்று — ஏதொன்று
உன்னிடம் சொல்ல மனமுங்கூசி — அதை
என்மூலம் உனக்குச்சொல்லச் சொன்னார் — இந்நன்னாள்
கீழே படுத்துறங்குறார் ராமா — தாமதிக்கா
தின்றே புறப்பட்டிடுவாய் பூமா — நன்னேமா.

**ஸ்ரீராமன் வசனம் :** தாயே நமஸ்காரம்.

**கோசலை வசனம் :** கண்ணே! நீ பட்டாபிஷேக கோலத்துடன் வருவாயென்று ஆசையுடன் எதிர்பார்த்திருந்தேன். அதற்கு மாருக, நீ மரவுரி உடுத்தி சடை முடிதரித்து வந்திருக்கிருய். என்ன காரணம் அப்பா. ராமா!

**ராமன் விருத்தம்.**

அன்றுசிற் றன்னைக்கு ரெண்டுவரந் தந்தை அளித்த தாலே
ஒன்றிலென் தம்பிபரதன் தனக்குப் பட்டம் ஒளிந்த மற்ருென்
றின்றுமுதல் பதினுலு ஆண்டுவரை காட்டில் ஏக வென்ருர்
நன்ருமிவ் வாக்யபரி பாலனம் நாட்டல் நன்மை தானே!

**ராமன் வசனம் :** அம்மா! தந்தை சொன்மிக்க மந்திரமில்லை. தாய் சொற்றுறத்தால் வாசகமில்லை. ஆதலின் தம்பி பரதன் நாடாண்டு வரவும் நான் பதினுன்கு வருடம் காடாண்டு திரும்புகிறேன். தயவு செய்து விடை கொடுங்கள் தாயே!

**6-வது தரு. பாட்டு.** (வித்துருமை கால் நாட்டி என்ற சந்தம்)

போய் வருவேன் விடை தருவீர் உன்புத்திரனுக் கிரங்கிடுவீர்
பெற்றதவப் பயனடைந்தேன் உத்தமப் பெற்ருேர்க்குப் பிறந்தேன்
அப்பா! உன்னை வனத்தில் விட்டு, அரண்மனை தன்னில் இருந்து
ஒப்பி மனம் சகிப்பேனே. உதவாது நானும் வாரேன்.
தந்தை மனம் நோகாதபடி — தேறுதலை சொல்வதிருக்க
எந்தனுடன் வருவதென்ப — திது சரியல்ல வம்மா —
பதினுலு வருஷமதை — பதினுலு நாளிகை போல்
பாவித்து வருவேனம்மா — பயப்பட வேண்டாமம்மா
இந்தச்சேதி லட்சுமணனே — கேட்டு மனதேங்கி நொந்து
இப்பொழு தண்ணனுக்குப்பட்டம் — கட்டிப் புவியாளச்செய்வேன்
எதிர்ப்பவர்கள் எவராளுலும் — எமனுலகனுப்பி வைப்பேன்
சதிசெய்த சண்டாளர்களை — தாட்டிகமாய் வாட்டிவதைப்பேன்
தம்பிகாளை லட்சுமணனே உன்பொறுமை எல்லாம் எங்கே
வந்த விதியைத் தடுக்கவல்லவரோ நாம் அல்ல
அண்ணு நானும் கூடவருவேன்—தடுத்துச் சொன்ஞலுயிர் வாழேன்
எண்ணுதீர் நானும்மைப் பிரிந்தே — இகபோக சுகம்விரும்பேன்
தம்பி லட்சுமணனேடே — தனிவனம் போய் வருவாய்
வெம்பிமனம் வாடுரேண்டா — விஜய கோதண்டராமா!

17

குயில் மொழி சீதையுமே — மனம் நொந்து ஓடிவந்து
மரவுரி சடைமுடியே — வைத்துவந்த வகையென்னவோ
அன்புமிகும் எந்தன் கண்ணே — தந்தைவரம் தந்ததாலே
எந்தன் தம்பி பரதன்பட்டம் — ஏற்றிடுவான் வனம்போரேன்
அரண்மனை சேடிகளுடன் — ஆனந்தமோடிருப்பாய்
வனம் சென்று பதினாலு — வருஷமும் கழித்து வாரேன்
எந்தனுயிர் பிராணநாதா — உன்னைவிட்டு தனித்திருக்கேன்.
உந்தனுடன் நானும் வருவேன் — இல்லையாகில் உயிர்வாழேன்
படுக்கையே மண்ணாகும் — கிழங்குகள் பழம் உணவே
நடப்பதும் கல்லுமுட்கள் — நங்கையே நீ வேண்டாம்
என்ன சொன்னாலுமே நான் — உம்மை விட்டு விலகேனே
மன்னவனை விட்டு பெண்கள் — வையகத்தில் வாழ்வதுண்டோ
ராமனும் சீதையுடன் — லட்சுமணன் பின்தொடர
மேவியே மனமகிழ்ந்தார் — மூவரும் வனம் நடந்தார்
ஓலமிட் டயோத்தி மக்கள் — தாம்புலம்பி வாடிநிற்க
சிலரதமேறி கங்கை — ஆறடைந்தார் மாலையிலே
கங்கை ஓடக்காரன் குகன் — முன்புவந்து தெண்டனிட்டு
கும்பிடவும் நேசமாகி — பின்பக்கரை சேரலுற்றார்
மெத்தவும் சந்தோஷமுடன் — சித்ரகூட பர்வதத்திலே
லட்சுமணன் கட்டிய பர்ன — சாலையினில் வீற்றிருந்தார்
இப்படி இவர்களிருக்க — சத்துருக்கனிடம் பரதன்
கெட்டகனா கண்டவிபரம் — பதட்டமுடன் அறையலுற்றான்.

**பரதன் : (விருத்தம்)**

கோரராட் சசிஒருவள் கொற்றவன்கை பிடித்திழுக்கச்
சாரும்பட் டத்துயானைத் தந்தமொடி யக்கண்டேன்
பாரோமத் தீயனையப் பார்த்தேனே தம்பிஎன்ன
நேருமோ அறிகிலேனே நான்கண்ட கனவினாலே.

**வசனம் : தம்பி சத்ருக்கா.** பொல்லாத சகுணம் கண்டேன் என்ன விபரீதம் நேருமோ எனக்கு அச்சமாயிருக்கிறதே!

**சத்துருக்கன் வசனம் :** அண்ணா! அயோத்தியிலிருந்து தூதர் வந்தனர். திருமுகம் தந்தனர். பாருங்கள்.

**பரதன் வசனம் :** உடனே புறப்படும்படி குலகுருமூர்த்தி அனுப்பியிருக்கின்றனர். சீக்கிரம் புறப்படுவோம். தம்பி !

**சத்துருக்கன் வசனம் :** அப்படியே அண்ணா! சீக்கிரம் புறப்படுவோம்.

**7-வது தரு (பாட்டு)** சிந்து பின்மகுடம்.

வதிஷ்டர் குருமூர்த்தி அனுப்பித்த ஓலையால்
பதிக்குக் கடிதே புறப்படுவோம்
தடையேதிலா ரதமேறியே திடமா முழுமனதோடவே
சீக்கிரம் அயோத்தி செல்வோமடா
ஈதென்ன பாம்பு குறுக்கிடுதே — பார்ப்பான் எதிரில்
வருகின்றான் அந்தோ தம்பி
இது வேதனைதரவே மனமது நோகுதுபற்பல
எண்ணங்களும் அச்சம் உண்டாகுதே
கண்ட கனவினால் என்ன கலக்கங்கள்
உண்டாகுமோ தம்பி என்ன செய்வோம் —
கடிதேசெல நினைவேகொள இடையூறுகள் பலவாகுதே
காரணம் தெரியோமே சத்துருக்கா
என்று பலவாறு சிந்தித்த யோத்திக்கே
ஏகிக் குலகுரு முன் வணங்கி
இதுவேளையில் முதலாக நீ உனதாயிடம் செலவேணுமென்
றென்ற சொல்லாலே மாதாவைக் கண்டார்
ஏனம்மா ஓர்வித வாட்டத்துடன் நீரும்
இருப்பது மென்ன சொல்லிடுவீர்
இகபோக நல்சுகமே யுறபெற வாழ்வினிலுயர்வே கொளு
மெந்தன் தாயே அதைவிண்டிடுவீர்
நாடாள நீயுமே காடாள ராமனும்
நான்வரம் வாங்கினேன் தந்தையிடம்
நவியாமலே ஒருவாய் மொழி புகலாமலே உயிர்போனதே
நாமென்ன செய்வோமடா மகனே
ராமண்ணாவை நீயும் காட்டுக்கனுப்பின
காரணத்தாலன்றோ சண்டாளி
நமலோகமே புகவாயினர் மனுநீதியே தவறாத நம்
ராஜனான தந்தை சக்ரவர்த்தி

குலத்தைக் கெடுத்திட்ட கோடரிக்காம்பே நீ
கோறிய வரங்கள் நன்றுமோ
கொலைபாதகி யிதுயார் சொலுங்கெடு மாமதி முழுயோசனை
கெட்டாயே நீயொரு தாயோடி
வாளாலே உன்னைநான் வீசிக்கொன்றுலென்ன
வையகம் எந்தனை ஏசிடுமோ
மடநாயுன திடமே எழுநகர் மீதினில் வசைமாரிகள்
நாநிலம் தூற்றவும் செய்தாயடி
என்று சொல்லி யன்னை கோசலைத் தாயிடம்
ஏகி வணங்கியே அம்மா தாயே
இதுயோசனை யறியாதொரு சிறு பாலகனுறுசேயனை
இரங்கி மன்னிக்க வேணுமம்மா
நானும் வனம் சென்று ராமண்ணாவைக்கொண்டு
வந்துமே பட்டாபிஷேகம் செய்வேன்
நலமானதோவிது யோசனை தருவீர் விடை உமதாசைபோல்
நானிலத்து வசை நீங்கிடவே
எள்ளளவு மென்மேல் சந்தேகம் வேண்டாமே
ஏதுமறியேனே என்தாயே
எனவே சொலியனை வோருடன் திருமா பரதனுங்கூடி
ஏக்கமுடன் வனம் செல்லலுற்றுன்
கூட்டத்தைக் கண்ட குகனும் கோபங்கொண்டு
கோதண்ட ராமனைக் கொல்ல வென்று
பெருசேனையோ டெதிரே பரதனுமேவர விதுநீதியோ
பார்ப்பே னெருகை பரதனைத்தான்
ராமண்ணா ராமண்ணா என்றுமே பரதன்
தானழுது வந்த பக்தி கண்டு
மனதாரவே பணிந்தோடமே கரைசேரவே செய்தேவிடுத்
தப்புறம் போகவழி காட்டினுன்.

### பரதன் விருத்தம்.

சண்டாளி யானமாதா பெற்றதோர் வரத்தினுலே
விண்டமனு நீதிக்கு விரோதமே யண்ணரேறே!
கொண்டுநானே ஆளவென்னிற் குவலயப் பழிவருமே
பண்டுபோலே அயோத்திவந்து பட்டமுங் கொள்ளுவீரே.

**பரதன் வசனம் :** அண்ணு! தாயாகிய பேய்வரம் பெற்ற தன்மையால் தாங்கள் வனம்புகுவது! நான் நாடாள்வதா? தங்களைத் தாங்கும்படியான அரியாசனம் கேவலம் இந்த சின்னநாயைத் தாங்குவது புவிக்கடுக்குமா? அண்ணு.

**ராமர் வசனம் :** பரதா! வேண்டாம், எழுந்திரு; துக்கம்விடு! அழாதே! வரும் விதியைத் தடுக்கயாராலாகும்.

**8-வது தரு. பாட்டு.** (தில்லையம்பலதலமொன்று)

வந்தெந்தன் அபவாதம் தீர்ப்பீரே — அண்ணு எந்தன்
சிந்தை மகிழப் பட்டம் கொள்வீரே
மூத்தோனிருக்க இளையவன் பட்டம் — கொள்ள
ஏற்காதண்ணு ஈதுமே நட்டம்
தம்பி பரதா தந்தை வாக்யமே — கொண்டு
சார்ந்து வந்தேன் வனவாசமே
உந்தன் கட்டளை ஆள்வதை விட்டு — நீ
ஓடி வந்தாய் வேதனைப்பட்டு
வேண்டாம் திரும்பி பட்டம் கொள்ளுவாய் — தம்பி நீயும்
வாக்களித்த படியே ஆளுவாய்
தந்தை கிரியை முடிந்ததா தம்பி — அதை
சந்ததம் நீ சொல்லு வாய்தம்பி
தாயும் மனைவியல்ல வென்ருரே — பெற்ற
தனயன் மகனும் அல்ல வென்ருரே
தம்பி சத்ருக்கன் தன்னைக்கொண்டுமே — நேற்று
சரயு நதியில் கிரியை செய்தாரே
கிருபை வைத்து நீர்வருகுவீரண்ணு — என்சொல்
கேட்டுப்பட்டம் கொள்ளுவீரண்ணு
எனக்கிட்ட ஆணை வனத்தில் வாசமே — தம்பி
உனக்கிட்டது பட்டம் அல்லவோ
மறுத்துச் சொல்லாமல் நகருக்கேகுவாய் — உந்தன்
வாத்தின் படியே நகரை யாளுவாய்
சிம்மாசனத்தில் வீற்றிருக்கேனே — தருவாய்
சேவை செய்ய பாதுகை தானே
அன்பு கொண்டு பாதுகை தாரேன் — கொண்டு
ஆட்சிபுரிவாய் சொற்படி வாரேன்.

21

## ஸ்ரீ ராமன் விருத்தம்.

பாதுகை வாங்கிக் கொண்டு பரதனும் அயோத்தி சேர்ந்தான்
வேதசா புங்கர் வால கில்லியர் அகத்தி யர்தம்
சாதகமா மாசி பெற்ளும் சகலமா வஸ்தி ரங்கள்
போதரக் கொண்டோம் சொன்ன பஞ்சவடி தானே வந்தோம்.

**வசனம் :** தம்பி, லட்சுமணு! பரதன் நம்பேரிலுள்ள அன்புக்குச் சான்ருக எனது பாதுகையை வாங்கிச்சென்ருன். பின்னர் சரபுங்க முனிவர் வாலகில்லியர், அகஸ்தியர் முதலியவர்கள் ஆசீர்வாதம் பெற்ளும். குறுமுனிதந்த அஸ்திரங்கள் இரண்டையும் பெற்ளும். அல்லவா! இதோ இதுதான் பஞ்சவடி என்ற இடம். இங்கு வந்ததும் நமது சிறிய தந்தை சடாயு அவர்கள் நேசமும் நமக்குக்கிடைத்தது. ஆதலின் இங்கு சிலகாலம்தங்கி இருக்கலாம். எப்படி உனது அபிப்ராயம்?

**லட்சுமணன் வசனம் :** அண்ணு! தங்களபிப்பிராயப்படியே இங்கு சில காலம் தங்கி இருப்போம். பதினன்கு வருடமும் இங்கேயே வாசம் செய்து கழித்தாலும் நலமே அண்ணு!

## ஸ்ரீ ராமர் விருத்தம்.

அன்புள்ள ஜானகியே ஆரமுத நேசிவாராய்
தண்சோலை வனங்களூடே ஜலவசதி பார்த்திடாயோ
தென்றலாற் புட்பமணஞ் சாருமிடம் வசிப்பதற்கோர்
நன்றிதாம் பஞ்சவடி நாயகியே உணர்ந்திடாயே

ஆமாம் பிராண நாதா : **விருத்தம்.**

நல்லநீர் வசதி யோடே நாடிடுங் கனிவர்க் கங்கள்
மெல்லென வீசுந் தென்றல் மிகுமெழிற் சோலை நாதா
ஜில்லெனக் குளிர்ந்த சோலைக் குயில்மயில் கூட்ட முந்தான்
விள்ளவே இதுபோ லின்பம் வீட்டினி லுண்டோ மன்னு.

## 9-வது தரு. காவடிச்சிந்து மெட்டு.

மின்னல் இடையுடைய அன்னநடை யணங்கே
வீரமிகுந்திடு பேரழகான வென்நாயகி — இங்கே
மேவிய சோலை வனங்கள் விசித்திரம் பாரடி
ஆற்ளோரம் ஓடும் மான்கள் கூட்டத்தைப் பார்த்தனையோ

அறிவுயர் அரிவையே மிகுபதிவிரதை நீ அன்புடன் - வனம்
அறியவே உடல் நிழலென வரு மிகுமதிச் சுந்தரம்
குளிர்ந்த இடந்தனிலே குயில்கள் மயிலிருக்கும்
கோமளமே பெரியோர் களுரைத்தது கோதில்லை — அதோ
மாமயில் தோகைகள் காட்டியே ஆடுதல் வாதில்லை
அன்னங்கள் நீரின்மேலே ஆனந்தமாக நீந்தி
ஆடிடும் ஓடிடும் அழகதை நீயும் பார்த்தையா — இந்த
அவனியிதற்கிணை யாகுமோ சொல்லடி நேர்த்தியா
யானைக் கூட்டங்கள் மலைபோலே போகுது பாராய்
தேன்மொழி ஜானகி மான்விழி நாயகி அன்னமே — உந்தன்
சித்தமகிழ்ந்துற மெத்த விருப்பமுங் கொண்டேனே
தம்பி லக்குவன் செய்த சிங்காரப் பர்ணசாலை
நேர்த்தியதை வருணிக்க முடியலை வேலையே — இரு
பேருக்குமே மகிழூட்டிடுமே நிழற் சோலையே
மூங்கில் சரங்கள் கோத்து நாங்கில் வரிச்சுகளும்
மேல் மயில் தோகைகளாலே கூரை வேய்ந்துமே — தூண்கள்
விதவிதமாகவே நட்டுடன் வைத்தது பாந்தமே.

**ராமர் வசனம் :** சீதா! அதோ பார்! உனக்கென்று பிரத்தியேக மாக ஒரு குடிசை பின்புறம் அமைத்திருக்கிறுன் தம்பி, பார்த்தனேயா?

**சீதை வசனம் :** வாஸ்தவந்தான்! நாதா! இப்படிப்பட்ட வேலை களெல்லாம் எப்படிக் கற்றுக்கொண்டார். நன்ருய் இருக்கிறதே. நாதா!

**ராமர் வசனம் :** கண்ணே! வனத்தில் மரங்களுக்குப் பஞ்சமா! மற்ற எவைகள் தான் இங்கு கிடைக்காது! வெட்டும் தொழில்களுக் கெல்லாம் தன்பாணங்களினுலே யுக்திசெய்து வெட்டித் துண்டுகளாக்கி இத்தனையும் தம்பி லச்சுமணன் செய்தது, எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.

**சூர்ப்பநகை பிரவேசம் தனக்குள் வசனம்:** ஏது! இந்த வனத்தில் இன்று ஒரு குடிசை தென்படுகிறது. அதனுள் இருக்கும் இரு ஆண் பிள்ளைகளும் என்ன அழகாக இருக்கிருர்களே! ஆஹா! இப்படிப்பட்ட புருஷனை யல்லவோ மணந்து சுகிக்க வேண்டும். ஓ! இந்த உருவத்தில் அவர்கள் முன்போகக்கூடாது. நல்ல மோகினி உருவெடுத்து அவர்கள் முன்சென்று பார்க்கிறேன்.

## 10-வது தரு. அடுக்கு மல்லிகை என்ற சந்தம்.

என்னஇது அதிசயமாக — இங்கோர் குடிசை
இருக்குதின்றே விமரிசையாக
இதனருத்த மென்னவென் றெனக்கு விளங்க
உரைத்திடுபவர் ஒருத்தருமிலை
அந்தரத்தில் வாழுந்தேவரோ — அல்லது இந்தச்
சுந்தரங்கள் மனிதராவரோ — வகை
யேது மறியேன் மாயை மன்மத
சீலரிவரைக் கூடில் நலமே
ஆண்களென்றால் இவர்களே சரி — அயன் சிருஷ்டித்த
அசுரர்களோ பாழும் வேசரி
அவர்களெனக்குச் சிறிதும் பிடித்தப்
படலை வருத்தப்படுதே மனது
குடும்ப வாழ்க்கைக் குகந்த மாரர்கள் — என்னோடுகூட
தகுந்தமாப்பிள்ளையான வீரர்கள்
இவரோடு பற்பல லீலைகள் செய்து
ஆடிடுவது அவனிக்கடுக்கும்
பக்கஞ்சென்று பார்ப்பதற்குள்ளே — இப்பாவி மன்மதன்
பாணந்தொடுத்து வேதனைக்குள்ளே — என்னைப்
படுத்துஞ் சங்கடம் பொறுத்தற்குரிய
நிலைக்குமீறியே துடிக்கலாகுதே
யாரடிநீ பெண் தனியாக — இம்மா வனத்தில்
வந்து நின்றுயே ஒயிலாக — பல
வார்த்தை பேசியே போர்த்திடுகிற
மார்க்க மென்னடி சீச்சீயேனடி
அழகுத் துரையென் மன்மத நாதா — இப்போது வந்தென்
ஆசைதீர்க்க மனது வராதா — உந்தன்
அடிமை என்றைக்கு முனக்குத் தொண்டுமே
அடியாள் செய்குவேன் அபயந்தந்திடு
உன்னைக்கூடி சரச சல்லாபம் — செய்தே என்வாழ்க்கை
உயரப்பாடு படுவனே தாபம் — உந்தன்
உடற்குரியவள் எனக்குப் பிரமன்
அளித்தனனிந்த அழகு வந்ததே
கண்டபடி பேசி என்னிடம் — கிட்டவாராதே

காரிகையுன் ஊரும் பேருடன்
கழறவே இது விஷய மறியப்
பிறகு சொல்லுறேனிது சமயமே
லங்கை ராவணன் தங்கையும் நானே — என்பேரும் சூர்ப்ப
நங்கையென்றே சொல்லுவார் தாமே — இது
நாளினிலுன தாவல் மீறுது
காந்தர்வ மணங்கலந்து கொள்ளுவாய்
சீச்சியதிகம் பேச்சு வேண்டாமே — இந்த மட்டிலே
சென்றுவிடுவாய் வேண்டிக்கொண்டேனே — இல்லே
சிரத்துக் காபத்து வருத்த நேரிடும்
புறத்திக்கிலோடிப் பிழைத்துக் கொள்ளடி
அழகி யொருவள் அருகிலிருப்பதால் — அதனாலல்லவோ
அவனும் நம்மையடைய விழிக்குறான் — நாம்
அவளைத் தூரத்தி லெடுத்துக் கொண்டுபோய்
மறைத்து வைத்திட எனக்கு வெற்றியே
யாரடி நீ கோர உருவமாய் — என் நாதன் பக்கம்
அமர்ந்திருக்கிறாயேண்டி சுக்களத்தி — உனக்
கேது சொந்தமே நீயுமெந்தனுக்கிடு
இல்லையே போடி ஓடிப்போ
பிராணகாந்தரே யிவள்யாரு — பேய் போல வந்து
பிதற்றுகிறாள் விரட்டவே பாரும் — இந்த
போரக்கியை மேலுலகத்துக்
கே யனுப்புதலே தடையென்ன
பாவியிவளைப் பார்த்திடல் தோஷம் — நாமிருவரும்
பன்னசாலை யுள்போவதே உஜிதம் — நீ
பயப்படாதிரு அரக்கர்மாயையே
வியப்புடையதே மதிப்புநாயகி

**சூர்ப்பநகை வசனம் :** இன்றுபோய் என் எண்ணத்தை முடித்து அந்த அழகனைக்கட்டி மகிழ்வேன்.

## 11-வது தருவு பாட்டு. (எந்தனது திருநாடு)

இன்றிவளைத் தூக்கிக் கொண்டு மறைவிடத்தில் வைத்து
எந்தன் ஆசைபோல அவனை இறுக அணைந்து•சுகிப்பேன்
அணங்கவள் இல்லாது போனால் ஆணழகன் எனக்கு

இணங்கிடுவான் செந்தூக்காய் எடுத்திடுவேன் விடுத்து
ஏண்டி சக்களாத்தி யென்றே தாண்டிக்குதிக்கும் போது
ஈதறிந்த லக்குவனும் பாய்ந்திட்டானப் போது
மூக்கு முகை காதறுத்து முடுக்கி விட்டப்போது
பேய்க்கதறல் கத்தி சூர்ப்பநகையும் போகும் போது
உடற்பிறப்பு அண்ணர்கர தூஷணரைக்கூட்டி — வந்து
ஒழித்திடுவேன் பாரென்றுமே ஓடினாள் சீமாட்டி
அண்ணா கர தூஷணரே அடுத்த வனத்தில் இருவர்
அற்பநரர் களெந்தன் மூக்கை அறுத்து விட்டார் ஐயோ
ஒரு பிழையும் செய்யவில்லை அண்ணா என்ன செய்வேன்
நரப்பயல்கள் செய்த அவமானங் கொண்டோ உய்வேன்
அடுத்த வனத்தில் நீங்களிருப்பதாகவும் நான் சொல்ல
கடுத்து வந்தால் எல்லோரையுமே தொலைத்திடுவேனென்றார்
எந்த நாளும் நடவாத காரியமிக்காட்டில்
எந்தனவமானமதில் உங்களுக்கும் பங்கே
இந்திராதி தேவரெல்லாம் உங்கள் பேரைக்கேட்டால்
இடிகேட்ட பாம்புபோலே கிடுகிடுத் தோடாரோ?
சேதிகேட்டுக் கரனுடைய சேனையெல்லாங் கொதித்து — செந்
தூளெழும்ப ராமன் முன்னே கூட்டமாகக் குதித்து
யாரடா நரப்பயல்காள் கொஞ்சமும் பயமில்லா — தங்கை
நாசிதனை காதறுத்து மானபங்கஞ் செய்தீர்
அந்தரத்தில் தூக்கியு மைப்பந்துபோலே எறிவோம் — உம்
ஆவியெல்லாம் எமனுலகு அடைந்திடவே செய்வோம்
பார்த்த ராம லட்சுமணர் பதை பதைத்து வில்லை
பற்றிநாணி யேற்றியே கூர்பாணந் தொடுத்தாரே
எரிமலைகள் போலவந்த ராட்சதர்கள் கூட்டம்
எமனுலகு ஏகிடவே எடுத்தாளே ஓட்டம்
சூர்ப்பநகை லங்கைக்கு துரிதமாக ஓடிக்—கீழ்
ஆர்ப்பரிக்க ராவணன்முன் அலறியோடி வீழ்ந்தாள்.

## சூர்ப்பநகை விருத்தம்.

லங்கையை ஆட்சி செய்யும் ராவணேஸ் வரனே அண்ணா
துங்கபஞ்ச வடியி லோர்நல் செங்கனி கண்டே னுனக்கு
பங்கமிலா மாதைப் பற்றி ஓடியே தூக்கும் போது
அங்குநரன் மூக்கு முகையே அறுத்தனன் பாராய்! பாராய்!

**வசனம் :** அண்ணு! அவள் அழகைப்பற்றி எடுத்துக்கூற என்னல் இயலாது. உனது இருபது கண்களும் போதாது. பிரமன் அவளைப் படைத்ததே ஒரு தனி அழகு. அவளோடு நீ வாழ்க்கை நடத்தினல் தான் உன்புஜபல பராக்கிரமத்திற்குப் பொருத்தம் அண்ணு.

**இராவணன் வசனம் :** தங்கா! கலங்காதே! இதோ இப்பொழுதேபோய் அந்தகர் இருவரையும் ஏமாற்றி அந்த அழகி சீதையை சிறை எடுத்து வருகிறேன் நீபோ!

இராவணன் மாரீசனிடம் : **விருத்தம்.**

வாரும்என் மாமாநீர் மானுருவாய் பஞ்சவடி
தீரமதில் நார்முன்னல் தீரமொடு விளையாண்டால்
நாரியவள் மான்வேண்டி நாயகனை அனுப்பிடுவாள்
வீரத்தால் சிறைகொண்டு வந்திடுவேன் போய்வாரீர்.

**வசனம் :** தண்டகாரண்யத்தில் பஞ்சவடி தீரத்தில் ஒரு அழகி இருநரர்களுடன் இருக்கிருள். அவர்கள் முன் உமது மாயையால் ஒரு மானுருவாய் விளையாண்டு அவர்களிருவரைப் பிரிப்பதற்கு வழி செய்; நான் மறைந்திருந்து அவள் தனியாயிருக்கும் சமயம் பார்த்து, அந்த சீதையெனும் பெண்மணியைச் சிறைகொண்டு வந்து விடுகிறேன். உடனேபோய் வருவீர் மாமா!

**13-வது தரு. பாட்டு.** (வள்ளிமாது தன்வடிவை என்ற சந்தம்)

மாய ராட்சத மாரீசன் மானுரு வெடுத்தான் — பஞ்ச
வடிதனை யடுத்தான் — விளையாடல்கள் தொடுத்தான்
பன்னகசாலை முன்னே பாவை சீதையே — பார்த்து
ஆசைமேவியே — காதலனைக் கூவியே
மேனியெல்லாம் பொன்னுருவ மானிதோ பாரும் — பிடித்
தெனக்கு நீர்தாரும் — அதோ ஓடுதே பாரும்
கண்மணி என்சீதை அன்பே கலங்கிடல் ஏனே — மான்
பிடித்துத் தருவேனே — சந்தேகமும் ஏனே
பொய் மானண்ணு இதுநீர் புரிந்திடுவீரே — இதைத்
தெரிந்திடுவீரே — ஆசை துறந்திடுவீரே
லட்சுமணன் சொன்னதையே சீதையுங்கேட்டு — பொறு
மையே பட்டு — பெருங் கலக்கம் மேலிட்டு

எப்படியும் பிடித்து விளையாடத் தாருமே — ஓடு
வதற்குள் வாருமே — பழிபாவஞ் சாருமே
கண்மணியே கலங்கவேண்டாம் மானைத் தருகுவேன் — அரை
நொடிக்குள்ளே வருவேன் — வைராக்கியம் பெறுவேன்
மாயங்கள் பலபுரிந்து மானும் ஓடவே — உடல்
களைப்புமாகவே — மான்மேல் வெறுப்பு மீறவே
தம்பி சொன்ன வார்த்தையது சரியென்றே எண்ணி — வில்லைக்
குணத்தொனிபண்ணி — அம்பை விட்டாரே நண்ணி
அம்புபட்ட மாரீசமான் "சீதா லக்ஷ்மணா" — உமக்கபயம்
என்றுமே — கீழ் விழுந்து மாளவே
அபயக்குரல் கேட்டு சீதை திடுக்கிட்டேயெழுந்து — லட்சு
மணனையே கடிந்து — பார்த்துவாவெனத் தொடர்ந்து
அண்ணனுக்கு எந்தவித ஆபத்தில்லையே — மாய
அரக்கர் தொல்லையே — போகுமவசியமில்லையே
அண்ணனிறந்தால் நமக்கு அண்ணியும் ஆவாள் — என
எண்ணியே வாளா — நீ இருக்கிறாய் மேலா
ஐயோ ஈதென்ன அபாண்ட வார்த்தை சொல்லுறீர் — கடவுட்
கடுக்கா வில்லுறீர் — இது நன்றோ சொல்லுவீர்
இட்சணமே சென்றுவாரேன் என்று கானிலே — நடந்
தெதிரில் காணவே — மனம் புண்போ லாகவே
தம்பி உந்தன் வார்த்தைமீறித் தடுத்து வந்தேனே — அரக்கர்
மாயங்கண்டேனே — சீதை எண்ணங் கொண்டேனே
சீதையைத் தனித்து விட்டாய் பன்னசாலையிலே — உன்மேல்
தோஷமில்லையே — வந்ததெந்தன் அல்லையே

**ஸ்ரீராமர் வசனம்:** தம்பி! அரக்கர்மாயம் என்று நீ சொல்லியும் கேளாது, சீதையின் பிடிவாதப்பேச்சில் இரங்கிவந்தேன்; அரக்கர் மாயங் கண்டேன். சீதை தனித்திருப்பாள் செல்வோம் வா.

**இலட்சுமணன் வசனம்:** அண்ணா! அப்படியே செல்வோம் வாருங்கள் சீக்கிரம்.

**இராவணன் விருத்தம்.**

பெண்களுக்கெல் லாந்தலைவி பிதாபார பட்சமதாய்
தன்கையாற் சிருட்டித்த தன்மையை என்னசொல்வேன்
கண்கவருங் கட்டழகி காசினியில் இவளைப்போல்
பெண்களெங்குங் கிடையாது எனக்குவாய்த்த பெரும்பேறே.

**வசனம்:** ஆ ஹா! என்ன அலங்காரம்! தங்கை சூர்ப்பநகை சும்மா சொல்லுவாளா! சரி! தாமதிக்கக்கூடாது. வனம் புகுந்த மனிதர் இருவரும் திரும்பி வருவதற்குள் ஓர் மாயசந்நியாசி உருவத்துடன் சென்று அவளிடம் வார்த்தையாடி ஆவன பார்க்கின்றேன்.

**14-வது தரு.** நல்வாக்கு நீ கொடடி என்ற சந்தம்.

சம்போ சிவா சங்கரா — சிவ
சாம்ப சதாசிவ தேசிகா — சிவஞானபோதா
வாரும் முனிவரரே — வந்த
வாரென்ன சொல்லுவீரே — விள்ளுவீரே
பசியின் கொடுமையாலே — இங்கு
பசிதணிந்து போகவந்தேன் — அமுதே படைப்பாய்
கிழங்கு பழங்காய்கறிகள் — கொண்டு
தந்திடுவேன் உண்பீரையா — தவத்திநேரே
ராஜகுல மங்கை நீயும் — இன்று
ஆரண்யத்தில் வந்ததென்ன — கூறிடுவாய்
சத்யநெறி தன்னைக்காக்க — வந்தோம்
இத்தருணம் வனத்தினிலே — மாதவரே
உந்தனுக்கோர் நல்லசேதி — இன்று
உரைத்திடவே வந்தேன் பெண்ணே — இத்தினம் கண்ணே
பொன்னிலங்கை ஆக்ஷிசெய்யும் — திக்விஜய
மன்னன் லங்கேசனுக்கு — பேருபெற்ற
வானோர் அரம்பையர்கள் — தேவ
வையகத்தில் உள்ளவர்கள் — ஏவல் செய்வார்
அந்த ராவணேஸ்வரனை — நீம
கிழ்ந்துமணம் செய்து கொண்டால் — உன் நல்லதிஷ்டம்
தெய்வ கன்னியாவர்களும் — உந்தனேவல்
செய்ய எதிர்பார்த்திருப்பார் — நன்மை சொன்னேன்
பெரியவரானதாலே — அதிக
மரியாதையாய் சொல்லுறேன் — நிற்க வேண்டாம்
மானின் பின்னே சென்ற நாதன் — வந்தால்
மாண்டிடுவாய் சென்றிடுவாய் — மரியாதையாக

**இராவணன் வசனம்:** அடி சீதா! நான்தான் ராவணேஸ்வரன். மூன்றரைக் கோடி வருடம் ஆயுள்வரம் பெற்றவன். சாமவேதகீத

நிபுணன். கைலேயை வேருடன் பேர்த்தெடுத்தவன். சாமான்ய மனிதனென்று எண்ணுகிறாய்?

**சீதை வசனம் :** அடே! ராட்சதா! உன் தங்கை சூர்ப்பநகை, மூக்கு முலை அறுக்கப்பட்டு வந்தாள். அவளுக்குத் துணையாக வந்த கரதூஷணாதியர்கள் அடைந்த கதி தெரியுமா உனக்கு! இன்னும் வருபவர்கள் எல்லோருக்கும் என் பிராணபதிதான் எமன் என்பது நீ தெரிந்து கொள்ளடா!

**15-வது தரு.** (கட்டபொம்மு சந்தம்)

கிளிமொழியன்ன நடையழகி — எந்தன்
கீர்த்தியை நீயும் அறியாயடி — எந்தன் (கீர்த்தி)
ஏழுசுற்றுக் கோட்டைமதில்களடி — கண்ணே
எல்லாம் தங்கமய லங்கையடி — பெண்ணே
என் சொல்லைக்கேட்டு நீ வந்தாயானால்
இந்திர போகத்தில் உன்னைவைப்பேன் — கண்ணே
வெட்கங்கெட்ட மடநாயே போடா — என்
நாதன் வருகின்ற நேரமாச்சு — அடே
அத்தருணம் நீ இங்கிருப்பையானால் — உனக்
காபத்து ஓடிப்பிழைத்துக் கொள்வாய் — போடா
பன்னகசாலையோடுன்னைக் கொண்டு
போரேனடி இதோ பெண்ணணங்கே
என்னை எதிர்த்தவர் எமனுலகம்
இன்றே புகுவாரே பாரடி நீ
ஐயோ பத்துத் தலை இருபது கை
அரக்கனைப் பார்க்கப் பயமாகுதே
இப்படியாகுமென் றெண்ணிலேனே
என்நாதன் மான்பின்னே சென்றனரே
திருட்டுத்தனம் ஏண்டா ராவணனே — நீ
நிறுத்திப் போர் செய்யடா நாதனோடு
செலித்துக் கொண்டாயாகில் கொண்டுபோவாய்
கீர்த்திபெற்ற வனென்றால் கேட்டிடுவாய்
பெண்புத்தியாலேயே மோசம் போனேன் — ஐயோ
என்நிலை நாதற்கார் சொல்லிடுவார்
பொய் மானென்று சொல்லியுங் கேளாமல்

போய்பற்றி வாவென்று போக்கினேனே — ஐயோ
சீதையின் அபயக்குரல் கேட்டு — சடாயு
வேதையுடனே பறந்து வந்து
பாதக ராவணு பத்தினியை
படுசிறை கொண்டுமே போகாதடா
வேண்டாம் விடுத்திடு மாண்டிடுவாய் — உன்
வீரம் இருந்தாலே தேரோட்டடா
என்று சடாயுவும் ராவணனும்
இருவரும் கடும்போர் புரிகையிலே
இறகுகளைப் பாவி ராவணனும் — வெட்ட
இடறி விழுந்ததே பக்ஷிராஜா
குற்றுயிராய்க் கீழே விழுந்தவுடன்
கொண்டுபோருன் லங்கை ஆகாயத்தே
மாமா சடாயுவே என் நாதற்கு
வழுத்துவீர் சேதி என்ருள் சீதையே

(பர்னசாலே வந்தடைந்த ராமலச்சுமணர் பன்னசாலேயையும் சீதையையும் காணுது திகைத்துவருந்துதல்)

**16-வது தரு.** (அய்யாசிறுவன் என்ற சந்தம்)

தம்பிலக்குமணனே என்ன சங்கடம் ஐயோ — சீதை
எங்குற்ருளேயோ
தாரணியோர் ஏசிடவே சென்மம் எடுத்தேன் — பெருந்
துன்பம் அடுத்தேன்
அரக்கர் மாய்கைதானே யண்ணு பார்த்திடுவீரே — ரதச்
சுவடு காண்பீரே — இந்த
ஆரண்யத்தில் தாரைமேலே ஓடிடுவோமே — அவரைத்
தேடிடுவோமே
நம் சிறிய தந்தை பக்ஷிராஜா குற்றுயிராய் — இறகை
இழந்து கிடக்குறுர் — அந்த
நடவடிக்கை இருவரும் அறிவாரென்றே நினைக்குறேன் — சா
மாரி திணிக்குரேன்
ராவணனும் மைதிலியை ரதத்தினில் கொண்டு — போருன்
தெற்கினில் கண்டு — அதை

31 102115 31

நான்தடுத்துப் போர்புரிந்தேன் இறகில் வெட்டுண்டு — சீதை
பார்த்தது முண்டு
அந்தோ தம்பி சிறிய தந்தை ஆவிநீங்கினர் — நல்ல
புகழுந் தாங்கினர் — இவர்
ஆத்ம தகனக்கிரியை செய்து பின்புறப்படுவோம் — கடன்
செய்யமுற் படுவோம்
தம்பிகானில் எங்கும் அலைந்து தாகம் ஆகுதே — மிகு
களைப்பு மீறுதே — இங்கு
தாகசாந்திக்கே இருட்டில் எங்கு காண்போமே — மனத்
தென்பு பூண்போமே
எனக்குக்கட்டளை இட்டால் இப்போ வருவேனேகொண்டு— நல்ல
தண்ணீரும் மொண்டு — நான்
வருமளவும் இவ்விடத்தில் நீருமுட்கார்ந்து — இருப்பீர்
வருவேனே நன்று
ஆரண்யத்து இருளில் ஓர் பெண் அயோ முகிகண்டு — காதல்
வார்த்தையும் விண்டு — கட்டி
யணைத்துக் தூக்கி யாகாயத்தில் எழும்பினுள் நன்றே — இளையோன்
திகைத்தனனன்றே
மூக்குமுலைமான பங்கம் செய்தவப் போது — பெண்
கதறிடும் போது — அந்தப்
போக்குக்கண்டு ராம ஸஸ்த்திரம் போட்டவப்போது — வழி
தெரிந்தனப் போது
அண்ணனிடம் வந்து சங்கதி சொல்லியே சேர்ந்தார் — விடி
வெள்ளியும் பார்த்தார்
அப்பால் கவந்த அரக்கனைக் கொன்று சவரிக்கு முத்தி — அழித்
தார் மிகுபக்தி
பார்த்த இடமெங்கும் சீதை பார்வையாலேயே — மிகக்
கவலையாகவே — பெரு
பம்பைநதி தீரத்தினைப் பற்றினர்களே — கவலை
யுற்ற நேரமே
அனுமன் கண்டு சுக்ரீவனை அழைத்து வந்துமே — நேச
மாகியு வந்துமே — எல்லாம்
அன்றுசொன்ன வாலியை நான்கொன்றிடுவேனே — பட்டம்
தந்திடுவேனே

O-,85
N52

என்றும் மராமரங்கள் எய்தும் துந்துபியேற்றி — கண்டும்
மகிழ்ந்துமே போற்றி — இனி
யந்த வாலியைச் சண்டைக்கு அழைத்திடுவாயே — சரந்
துனைத்திடுவேனே
பச்சைக்கொடி பதித்துக்கொண்டு சண்டை செய்குறுன் — சுக்
ரீவன் நைகுறுன் — அந்தப்
பாதகன் வாலிக்கு ராமர் பாணம் போட்டிட — விழுந்தான்
பற்கள் காட்டிட.

**வாலி வசனம் :** நானும் என் தம்பியும் சமர் செய்யும்போது, மறைவில் நின்று பாணந்தொடுத்தவன் யார்? ஐயோ! இந்தப் பாணம் நான் இழுத்துப் பிடிக்கப் பிடிக்க, உள்ளேயே ஊடுருவிச் செல்கின்றதே! இது என்ன அக்ரமம்! இவன் யார்?

**17-வது தரு.** (பாழைவாய்க்கமுகில் வந்தூர்)

குடும்பத்து விவகாரம் இடுஞ் சகோதரர் மூண்ட
அடங்கொண்டு சமர் செய்யும் போதினில் — அய
லவனொருவன் எந்தன் மீதினில் — பெரு
சாமும் விடுவது அழகிதல்லவே
மறைவில் நின்றது முறைமை யன்றுநல்
ஆண்பிள்ளையானல் எதிர்வந்தன்றோ — சண்டை
ஆடுதல் ஆண்மைக்குரிய பண்பன்றோ
வித்தைசொல்லித் தந்தவனும் மெத்த புத்திசாலியிவன்
மேட்டிமையே தீட்டின மாத்திலே — பதம்
பார்த்திடுங் குணம்படைத்த தூர்த்தனே — அதோ
வருகிறுரிரு மமதையாளர்க
ளவர்களாகுமிச் சரமு மெய்தவர்
வார்த்தையேன் பேசாமலேயும் பார்க்கிறீர் — பட்ச
பாத ஓர ஞாயவஞ்சந் தீர்க்கிறீர்
சூரிய குலத்தினுக்கோர் மாசுதேடிவைத்து விட்டாய்
சுந்தர கோதண்டங்கொண்ட ராமனே — இந்தச்
சூழ்ச்சிசொல்லித் தந்தவர்யார் நேமனே — வரு
துன்பமாமது காம நோயுடன்
பஞ்சமா பெரு பாதகங்களில்
தோய்ந்த துஷ்டன் செய்கை கண்டிக்காததா — அதற்

காக மறைந்தெய்திடுதல் நீதியா
நாமிருக பட்சிபேத யியல்புகளைப் படித்தறியாக்
கயவனே நீ காரணஞ் சொல்வாயடா — வன
வாசம் வந்ததாலே மதி போச்சடா — உன்
மனைவி சீதையைத் திருடி ராவணன்
கடலுந் தாண்டிய கொடுமையாலதி
மான அவமானம் என்பதில்லையா — மண்டை
மூளை கெட்டதாலே வந்த தொல்லையா
மன்னர்கள் வனவிலங்கை மறைவில் நின்று கொன்றிடுவார்
வையகமே தெரியும் நீதிதானடா — வாலி
வார்த்தைமிகப் பேசி வீசுருயடா — மிக
வாது செய்து சகோதரன் மனை
யாளை யாரைநீ நேசங்கொண்டது
ராஜநீதிக் கேயடுத்த செய்கையா — இந்தக்
காரணத்தா லெய்திட்டேன் நீ உய்வையா
உனக்கேது ராஜரீகம் உன் தம்பி பரதனுக்கே
உண்டன்றோ நேர் முறையால் நீதிகள் — நீ
யுரைப்பது சரியல்ல சேதிகள் — இது
அவலை எண்ணியே உரலிடித்த
சரிதையாகுமே அறிகுவாயடா
சுக்ரீவன் நேசத்தைக் கொண்டதால் — அந்தத்
தசக்ரீவன் சாமான்ய மென்றுயோ
யானையின் பகையைத்தேடிப் பூனையின் உதவிநாடும்
அற்பச் சிறுபயல் நீதானடா — வாலில் கட்டி
யாட்டின சேதி நீ யறியாயடா
அறிவிலாத வுன்செயலினுல் புவி
முழுதுமே வசை பரவலானதே
ஆண்மைத்தனம் ஈதுவல்ல ராமனே — இந்த
அநீதத்தீமையாற்பழி சாருமே
எந்தன் முன்னே சுக்ரீவனும் முந்திவந்தடைக்கலம்பு
குந்ததா லபயந்தந்தேன் வாலியே — அந்த
வார்த்தைதன்னைக் காப்பதன்றோ நீதியே — அவ்
வாக்கியம் பொய்க் காதிருக்கவே
தாக்கினேனுனைச் சாய்க்கவேயிதில்

வசையென்ன சொல்லிடுவாய் மூடனே — நல்யோ
சனைசெய்து பார்குடி கேடனே
சித்தர் முத்தர் போற்றுந்திரு மூர்த்திகளுமோருருவாய்த்
திரண்டெழுந்த மூலமந்திர ரூபனே — எந்தன்
பூர்வோத்ர மறிந்துகொண்டேன் ராமனே
மூதறிவினையேது மறியாத்
தூஷணைகளையே பொறுத்திடும்
மூர்த்தியே ராகவா நானுன் பாத்திரம் — பாடும்
முத்துவீரன் கவிதையே நல் ஸ்தோத்திரம்.

### ஸ்ரீ ராமர் விருத்தம்.

அன்புள்ள சுக்ரீவா உன்னண்ணன் வாலி அகந்தை தன்னை
சொன்னசொற் தவராது மாய்த்துவிட் டோம்பின் சொன்னது போல்
மண்ணான கிஷ்கிந்தைக் குன்பட்டஞ் சூட்டி மகிழ்வ தற்கே
இன்னாளி லேயுந்தன் எழுபதுவெள் ளத்தை இட்டு வாராய்.

**ராமர் வசனம் :** தம்பி லட்சுமணா! சென்ற நான்குமாத கால மாய் மாரியின் காரணமாக, மன நிம்மதியின்றி, இக்குகையிலேயே, நாம் நாளைக் கடத்தி வந்து விட்டோம். மாரி காலந்தீர்ந்ததும், சுக்ரீவன் நமக்குக் கொடுத்த வாக்குப்படி, சீதையைத் தேடிப்போக ஏன் இன்னும் வரவில்லை. நீ இரண்டிலொன்று கேட்டுவா. பிறகு பேசிக்கொள்ளுகிறேன்.

**இலட்சுமணன் வசனம் :** அண்ணா! வானர ஜென்மம். மன்னிக்க வேண்டும். நான் போய் பார்த்துவிட்டு வருகிறேன்.

**18-வது தரு.** (அப்பா இதென்ன மலை என்ற சந்தம்)

கழிந்த நாலு மாதமும் பொழிந்த மழையினாலே
காலங்கடந்து போனதே — சுக்ரீவன் சொன்ன
சொல்லும் வீணாக ஆனதே
வாலி அக்ரமத்தொல்லை தீர்ந்ததினாலே பெரும்
மமதை கொண்டானே சுக்ரீவன் — சொன்ன சொல்லையும்
மறந்தானே நன்றி கெட்டவன்
கொஞ்சமும் நன்றியில்லா குரங்கதை வம்சத்தோடே
கொன்றழித்தாலும் தோஷமே — இல்லை நாம் செய்த
குரங்கதன் சகவாசமே

அண்ணு வானரப் புத்தியாலே மதுவருந்தி
சொன்ன சொல்லையே மறந்தான் — அவனைநாமே
மன்னிப்பதுவே தரந்தான்
லட்சுமணனுங்கோப மாகவருவதையே
அச்சணம் அங்கதன் கண்டு — இந்த விவரம்
சுக்ரீவன் தன்னிடம் விண்டு
இளையபெருமாள் சினந் தணியத்தாரை யனுப்பி
எங்களை மன்னிக்க வேண்டும் — மதிமயங்கி
இருந்தோம் பொறுத்திட வேண்டும்
இன்று கெஞ்சிடத்தாரை நன்று நன்று சுக்ரீவன்
எங்கே நன்றி மறந்தவன் — எனச் சுக்ரீவன்
வந்து பாதம் பணிந்தனன்
கோதண்டபாணி அண்ணர் கோபித்துப் போகச் சொன்னர்
ஓதிய வாக்குப் பொய்த்ததே — ஆட்சிமமதை
நீ பார்த்துச் சட்டம் வைத்ததே
குரங்கு கையில் பூமாலை கொண்டதோ ஆட்சிமுறை
கொஞ்சமும் நன்றி இல்லையே — அதனல் வரும்
அண்ணரின் கோபம் தொல்லையே
வானரக் கூட்டமெல்லாம் ராமரைக் காணவென்று
வந்து அடி பணிந்ததே — எல்லோருங்கூடி
நொந்து மனம் வருந்தவே
தெரிந்தும் தெரியாமலும் செய்த தப்பிதங்களைப்
பெரிதும் பொறுப்பீரே சாமி — பேரசேதனப்
பிராணி தெரியீரோ சாமி
இந்த க்ஷணத்தினிலே எந்த ஏவலிட்டாலும்
முந்தியு வந்துமே செய்வேன் — எந்த இடஞ்சல்
வந்தாலும் நெஞ்சில் அஞ்சிடேன்
திக்குக்கொரு சேனையை சேதிசொல்லி யனுப்பி
சீதையைத் தேடச் சொல்லுவாய் — அநுமந்தனை
தெற்கிலே போக விள்ளுவாய்
வாராய் ஆஞ்சநேயனே நேராக சீதை கண்டால்
கூறும் அடையாளங்களை — கொடுப்பாய் கணை
யாழியும் விவரங்களை
ஒன்றும் விடாதுரைத்து நன்றே திரும்பிவாராய்
சென்ற இடத்தில் வெற்றியே — பெற்றுத்திரும்ப

செப்பினே னுசிதத்தியே
மகேந்திரகிரியுச்சி வந்து நின்றே யனுமன்
வாகான ராம மந்திரம் — ஜெபித்துமேலே
பாய்ந்தான் விஸ்வரூபத்துடன்
லங்கை வந்தே குதித்து லங்கணியை மடித்து
நாடெல்லாஞ் சுற்றித்தேடுறுன் — சீதையைக்காணு
நாட்டத்தினுலே வாடுறுன்
மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும்
மூலை முடுக்குகளிலும் — சீதையைத் தேடி
வீதி வீதி நெடுகலும்
பற்பல இடந்தேடி பத்தினியைக் காணுது
மெத்த வருந்தி யனுமன் — வருகும்போது
சித்த முந்தான் மகிழ்ந்தனன்
அந்த நள்ளிரவிலே முந்து தீபங்களுடன்
வந்த ராவணன் தன்னையே — கண்டு மனதில்
சந்தேகம் பல எண்ணியே
எங்குபோகிறுனென்று பார்க்கும்போ தசோகவ
னங்களொரு பகுதியில் — அரக்கர் மத்தி
நங்கைகள் தன்னெதிரினில்
பாவியந்த ராவணன் மேவியே சீதையிடம்
பற்பல தூஷணை சொல்ல — போடா யென்றேசி
விட்டனளப்புறஞ் செல்ல
ராவணன் போன பின்பு சீதையம்மனும் நொந்து
ஏனிந்த உயிர் என்றுமே — தூக்குப் போடவே
எத்தனித்தபோது கண்டுமே
அனுமன் பஜனைசெய்து அப்பொழுதோடி சீதை
அண்டையில் வந்து நின்றுமே — அம்மா நான் தூதன்
அனுமனென் பெயர் என்றுமே.

**சீதை வசனம் :** அட ராட்சதப்பயலே! ராவணத் துரும்பே! உன் மாய்கை நானென்ன அறியாதவளா! அடிக்கடி என்னை வந்து இம்சிக்காதே! மரியாதையாய் சென்றுவிடு.

**அனுமன் வசனம் :** தாயே! உம்மைத் தேடிக்கொண்டு ராம லட்சுமணர் இருவரும் கிஷ்கிந்தை வந்தார்கள். கிஷ்கிந்தை வானர அரச

சுக்ரிவனுக்கு நான் மந்திரி. என் பெயர் ஆஞ்சநேயன். தங்களைத்தேடி நாலாதிக்கிலும் வானர சைன்யங்கள் சென்றிருக்கின்றன. நான் மட்டும் தெற்குநோக்கி இந்த லங்கை வந்தேன், உங்களைக் கண்டேன், ஆறுதல் கொண்டேன். சந்தேகம் வேண்டாம் அம்மா! நான் ராம தூதன் தான் நம்புங்கள். தாயே!

19-வது தரு. (சுருளிமலைமீதுமேவும் என்ற சந்தம்)

அம்மணியே அடையாளம் கேட்பீர் — இந்த
அனுமன் சொல்லால் சந்தேகந் தீர்ப்பீர் — கங்கை
ஆற்றில்வேடக் குகனிடம்
சாற்றினுரும்மைக் கொளுந்தி
யெனவே — அன்பு — பூணவே
தாய் பங்குக்கு ஆட்சியினைப் பறித்தாள் — வந்த
சேய் பரதன் பாதுகையும் பறித்தான் — என்று
கேலியாகச் சொன்னீரென்றும்
விராதனையே கொன்றதாகச்
சொன்னுர் — சொல்லச் —சொன்னுர்
சூர்ப்பநகை மூக்கு முலை சிதைத்து — வந்து
ஆர்த்த கரதூஷணரை வதைத்து — வந்த
மானதைப் பிடிக்கச்சொல்லி
போனபின்னே லக்குவனைச்
சினந்தீர் — பல — முனைந்தீர்
ராவணன் எடுத்து வரும் போது — சடாயு
ரதத்தை வழிமறித்த போது — அவர்
நல்லிறகை வெட்டி வீழ்த்தி
மாண்டிடவே ஈமக்கிரியை
செய்தார் — சாமியும் — செய்தார்
தாயே உம்மைத் தேடி வரும்போது — அரக்கத்
தையல் மானபங்கம் செய்தப் போது — எதிர்
தாண்டிய கவந்தனுயிர்
மாண்டிட சவரி பேட்டி
கண்டார் — விருந்தும் — உண்டார்
அண்ணனை வாலியையும் மடித்து — எந்தன்
அரசர்க்கு மணிமுடி தரித்து — மாரி

ஆனநான்கு மாதகாலம்
தானே குகை வீற்றிருந்தார்
சாமி — இளைய — சாமி
சப்ரமஞ்சத்தி லுறங்கும் போது — அவர்
கால் வருட எத்தனிக்கும் போது — உம்
கைவளையல் கழற்றிடக்
கல்லெல்லாம் பெண்ணாகுமென்ற
கதைதான் — சொன்னு — ரிதைத்தான்
சாமிதந்த கணையாழி பாரும் — இது
சரியோவென்ன வெனக்குக்கூறும் — இந்த
சாகரங் கடந்த விஸ்வ
ரூபமும்கண் டாலேதாயும்
அஞ்சும் — மிக — வஞ்சும்
என்றுஞ் சிரஞ்சீவியாக வாழ்வாய் — இந்த
சூடாமணிகொண்டு பதில் மீள்வாய் — பின்னர்
இன்னும் ஒரு மாதமுயிர்
வைப்பேனே வராவிடிலோ
இறப்பேன் — உயிர் — துறப்பேன்
கங்கைக் கரை தன்னில் கடன் கழித்து — பின்பு
காடு நீங்கி ராஜரீகம் செழித்து — வாழச்
சாற்றினதாகச் சொல்லுவாய்
சீக்கிரத்திலே விள்ளுவாய்
சேயா — ஆஞ்ச — நேயா
அம்மனிருந்த மரத்தை விடுத்து — அந்த
அசோக வனமெல்லாமே அழித்து — வந்த
சம்புமாலி அட்சயனைச்
சார்ந்தவரெல்லா மடியச்
செய்தார் — மடியச் — செய்தார்
இந்திரஜித்து அனுமனைக்கட்டி — லங்கேசன்
முன்புவாசில் துணிகளைச் சுற்றி — உடன்
சித்ரவதை செய்ய வென்று
சுற்றிவிட்ட தீயினாலே
குதித்தார் — லங்கையை — எறித்தார்
அங்கெதிர்த்த வீரர்களைக் கொன்று — பாய்ந்து
ஆனந்த மகேந்திரகிரி வந்து — தங்கும்

39

அங்கதன் சாம்புவந்த
னுடன் வந்த கவிகள் கூடி
ஆட — புகழ் — பாட
ஆட்டபாட்டங்களில் மூழ்கிக் களித்தார் — கூடி
அங்கிருந்த மதுவனத்தை அழித்தார் — பின்பு
அண்ணல் ராமசாமியிடம்
கன்னல் மொழி சீதைசேதி
சொல்ல — வந்தார் — மெல்ல.

**அனுமன் வசனம் :** கண்டேன் சீதையை! கண்டேன் என் அன்னையை ஸ்வாமி! லங்கையை அடுத்த அசோக வனத்தில் கண்டேன். ராவணன் வந்தான். நயவஞ்சகமாகப் பேசினன். தாய் அவனையேசி "போடா ராவணத்துரும்பே" என்று கடிந்துரைத்தார். விபீஷணன் புத்திரி திரிச்சடை என்ற பெண்ணின் தேறுதலால் அன்னை உயிருடன் இருக்கிறார் ஸ்வாமி! கணையாழி தந்தேன்! அதற்குப் பதில் இதோ சூடாமணி!

**20-வது தரு.** (வள்ளியம்மன் கும்மி சந்தம்)

அன்னை தனைக் கண்டேனே நான் — பெரும்
அசோகவனம் மரத்தினடி —வந்த
ராவணன்கெஞ்ச சீதையம்மனும்
வெட்கங்கெட்ட ராட்சதனே — சும்மா
வீண் வார்த்தை பேசாதடா
என்றுமவன் சென்றுவிட
திரிச்சடையாள் தேர்தலினல்
சிந்தை தேறியிருக்க — நானுமெல்லவே
எல்லோரும் உறங்கும்போது — கிட்டிச்
சொன்னேனே சேதியப்போது
சொன்னதெல்லாம் ஒன்றும்விடா
சொல்லித்தந்தேன் கணையாழியை
கையில் வாங்கியே — கண்கள் மேலிலொற்றியே
மாதகாலம் உயிர்வாழ்வேன் இல்லாவிடில் நான்மாள்வேன்

கங்கையினில் கடன்கழித்து — ஊரில் மாமியார்கள் மூவருக்கும்
வந்தன வழிபாடு — சொல்லச் சொன்னாரே
வார்த்தையது மீறியதால் — தம்பி
மனஸ்தாபம் வேண்டாமென்றார்
காகாசுரன் கதையதுவும் — கனவிலுமே வேறு பெண்ணை
கண்ணினாற் பாரே — னென்று சொன்னீர்களாமே
சூடாமணி தான் கொடுத்தார் — இது
சொல்லியதாலாசி விடுத்தார்
சீதை கண்டு சேதியும் விண்டு செல்வனே நீ சிரஞ்சீவியாய்
என்றும் நீடுழியாகவே வாழ்கவும் என்று
நத்துமுத்துவீரன் சொல்லும் — கவி
இத்தருணம் வெற்றி கொள்ளும்.

### ஸ்ரீ ராமர் விருத்தம்.

சுக்ரீவா படைக ளெல்லாம் தொகுத்தொன்றாய்க் கூட்டி வாராய்
பக்கமாய்க் கொண்டு சேது பந்தனமே கட்டி யேபின்
அக்கரைக்குச் செல்ல வேண்டும் அங்கதன் மற்றெல் லோர்க்கும்
பக்குவ மாய்ச்சொல் லிபுறப் பட்டிட வேவகை செய்வாய்.

**இராமர் வசனம் :** சுக்ரீவா! தாமதம் செய்யாதே! சேனைகளை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பயணத்திற்கு ஏற்பாடுசெய். நாளை விடியற் காலம் அக்கரை லங்கையில், நமது எழுபது வெள்ளம் வானர சேனைகளும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**சுக்ரீவன் வசனம் :** சுவாமி! தங்களது கட்டளைக்கு முன் பிருந்தே வானரசேனைகள் கும்பல் கும்பலாகக் கடற்கரை சேர்ந்து கொண்டிருக்கின்றன. அங்கதன் முதலாயினோரும், தத்தம் கடமைகளைத் தலைமை தாங்கி நடத்திவருகின்றனர் ஸ்வாமி! இனி நாம் புறப்பட வேண்டியது தான்!

**21-வது தரு.** (ஐயா சிறுவன் என்ற பாட்டின் எடுப்பு)

லங்கைசென்று திரும்பிவந்த ஆஞ்சநேயன்பாலே — நல்ல
சேதி கேட்டதாலே — இன்று
நாமினிக் கடற்கரையை நாடி நடப்போமே இதுகாலே
வரிசை வரிசையான சேனை வானரங்கள் காட்சி
கடலேதிரண்ட சாட்சி
மதிக்கும் லங்கைக் கழிவுவந்த வாறிதாம் அத்தாட்சி
சேனையெல்லாம் ஒன்றுகூடிச் சமுத்திரக்கரை தனிலே
சேர்ந்துகூடார மதிலே
சிந்தைக்கெல்லாம் விருந்துத் திட்டஞ் சேர்க்குஞ் சமயமதிலே
ராமனே அடைக்கலமென நவின்ற சத்தங்கேட்டு
எல்லோருமே திடுக்கிட்டு — பார்க்க
இறங்கி வந்தான் விபீஷணன் ராமன் தன்னைக்கேட்டு
ராகவனே சரணம் இந்த லங்கை ராவணன் தானே — எனக்
கண்ணனும் ஆவானே — இந்த
நாளினிலே சீதைவிட்டிட நானும் நவின்றேனே
புத்திபுகட்ட வந்தாயோடா புல்லனே உன்சொல்லு — போய்
அவனிடஞ் சேர்ந்து கொள்ளு — என்று
பிதற்றிஎன்னை விரட்டி விட்டான் அடைக்கலம் ஆட்கொள்ளு
என்றுரைத்த வார்த்தைகளை சுக்ரீவனும் கேட்டு — ஈ
தென்ன வஞ்சகத் திருட்டு — நாம்
இவனை நம்பலாகாதிது அரக்கர் செய்யும் புரட்டு
என்றுசொல்ல ராமருமே அனுமனையும் பார்த்து — உன்
அபிப்பிராயங் கேட்டு — பின்னே
ஆவன செய்வோம் மாருதி அன்பான சொல்லையூட்டு
நடையுடை பாவனைகளிலே நல்ல பக்திமானே — வி
பீஷணனுந்தானே — அன்று
நானும் நேரில் பார்த்திருக்க என்னைத் தூதென்றூனே
அம்ம னவர் தன்னை விட்டகலா திரிச்சடைதானே — விபீ
ஷணன் மகள் தானே — இவ
ராக்கினையால் தாய்க்குத் தேறுதல் சொல்வதொருத்தி தானே
ஆதலினால் இன்னவரை ஆட்கொள்ளுதல் நன்றே — பல
உதவிகளும் உண்டே — எந்தன்
அறிவுக்குத் தானிது பொருத்தமாமிவற்றை விண்டேன்

அப்படியே சரியென்று விபீஷணனை வாழ்த்தி — அவன்
அண்ணனையே வீழ்த்தி — நன்
களித்திடுவே னுந்தனுக்கே நன்முடியுஞ் சூட்டி
என்ற பின்னே வாராவதி கட்டிடவே நினைக்க — சுவாமி
வருண ஜெபஞ் செபிக்க — அவன்
வாராததால் சினந்து அக்கினியாஸ்த்திரமும் தொடுக்க
அலறிப்புலம்பி வருணன்வந்து அடிகளிலே பணிந்து — என்னை
மன்னித்திடனும் துணிந்து — மன
மாற வாழ்த்திக் காக்கவேணும் சேதுகட்ட விரைந்து.

**வருணன் வசனம் :** ஸ்வாமி! மச்சங்களுக்குள் சண்டை நேர்ந்ததால், அதைத்தீர்த்து வைக்கும்படியான காரியத்தில் தாமதிக்க நேர்ந்தது. ஆதலால் என்னை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும். இந்த க்ஷணத்திலே தாங்களிடும் ஏவல்களைத் தீர்த்துவைத்து மறுகாரியம் பார்க்கிறேன். ஸ்வாமி!

**ஸ்ரீராமர் வசனம் :** வருணா! சென்ற ஏழு நாட்களாய் உன்னை எதிர்பார்த்துப் பார்த்து என் காரியங்களெல்லாம் கெட்டன. ஆதலின் இப்பொழுதே சேதுபந்தனம் கட்டி அக்கரை செல்லவேண்டும். நமது எழுபது வெள்ளம் வானர சைன்யங்களும் கடல் தாண்டவேண்டும். ஆதலால் உனது உதவி தேவை. உனது முதுகிடந்தருவாய். இப்பொழுதே!

**வருணன் வசனம் :** ஸ்வாமி! அப்படியே ஆகட்டும்.

**22-வது தரு.** (வாசம் புகழ் ராஜநல்லூர் என்ற சந்தம்)

அன்புள்ள குமுதா அங்கதா சுக்ரீவனே
தென்புகொண்டே சேதுகட்ட சேர்தினமே
ஆகாவென்று வானரசேனை ஆகாயந்தாவி
அல்லோல கல்லோலமாக மாமலைமேவி
லட்சங்கோடி கோடியான மலைகளைப் பேர்த்து
மாபெருங் கடலாழத்தை மட்டமாய்த் தூர்த்து
திருவணையின் வேலைகள் முடிந்த பின்னரே
சேனையெல்லாம் அக்கரை தொடர்ந்து சென்றாரே
நீலன் நளன் சேர்ந்தமைத்த கூடாரத்திலே
ராம லக்ஷ்மிருவ ரமர்ந்த நேரத்திலே
சுந்தர ராவணன் வடக்குக் கோபுரத்தினில்
வந்துநிற்கும் காட்சிமுத்துவீரன் பாப்பினில்

43

## விபீஷணன் விருத்தம்.

இண்புய ராமா பூமா ஜெகத்தினைப் புரக்கும் நேமா
கன்மனப் பாவி அதோபார் காட்டுறான் தலைகோ புரத்தில்
பன்னுவீர் ஏவல் இன்றே பார்க்கிறேன் மொருகை யந்த
வன்மைகொள் மார்பைத் தாக்கி வதைத்துமே திரும்ப வின்றே.

### 23-வது தரு. (முன்முடுக்கு பின்நீட்டு)

கோபுரவாசல் நோக்கி சுக்ரீவன் தாவியே பாய்ந்தானே மிகுவேகம்
மார்பினிலே குத்தினனே — மயக்கமுற சுற்றினனே
ராவணனெதிர் சுக்ரீவனும் நின்றே—நீயொரு அற்ப நாயடாவென்றே
மகுட மொருகேடாஎன்று — அதை பிடுங்கிக்கொண்டு வந்தான் நன்று
ஆத்திரத்தோடே நீயவன்மேலே காத்திரங்கொண்டு பாய்ந்ததாகாதே
ஆனாலும் தனித்துநீயே — போனதே பெரும் பிசகே
லங்கைக்கோட்டையை முற்றுகையிடுவீர் நாலாபுறமும் சுற்றிவளைத்திடு
நஞ்செனவே எண்ணிடுவீர் —அந்த ராட்சதர்கள் மாயமெல்லாம் [வீர்
போருக்கு முன்னோர் தூதிடல் வேண்டும் போயங்கதனே திரும்புதல்
பொல்லாத செய்கைகளை —சொல்லிடுவாய் நீதிமுறை [வேண்டும்
ராவணன் சபையில் போயங்கதனும் ஞாயமும் நீதி நூல்கள் புகன்றும்
நல்லதடா சொல்வதுகேள் — நாதனடி பற்றிடுவாய்
நான்சொன்னபடி நீ கேட்டால் பிழைப்பாய்
வீணென்று நினைத்தாலே உயிரிழப்பாய்
நாசகாலம் வந்ததடா — நாடிழந்து மாய்வாயடா
வாலியின் மைந்தனங்கதா நீயே வாழத்தெரியாச்சிறுவனனையே
வீரனுந்தன் தந்தை தன்னை — வீழ்த்தினவன் பகைவனன்றோ
ஈதறியாமல் சிறுபிள்ளைத் தனமாய் என்னிடமேதோ உளருகிறாயே
இங்கிதமாங் கிங்கரரே — வந்து இக்குரங்கைக் கொல்லுவீரே
அரக்கரும் பாய்ந்து வந்திடும்போது ஆகாயத்தில் பறந்தனப்போது
கரும்புமெள்ளும் கசக்கினுல்தான் — பலன்
கண்டிடுவோம் கோதண்டசாமி
என்றுமே அங்கதன் இயம்பினகேட்டு
எல்லோரும் போர்க்கு ஆயத்தப்பட்டு
எழுச்சியுற்ற முத்துவீரன் — கவிப்
புகழ்ச்சியது பாடிடுவோம்.

**அங்கதன் வசனம் :** ஸ்வாமி! அந்த ராவண காதகனுக்கு எத்தனையோ எடுத்துரைத்தும் செவிடன் காதில் சங்கு ஊதின பலன் ஆயிற்று. கரும்பும் எள்ளும் நசுக்கினால் தான் பலன் கொடுக்கும். இனி அவன் நல்வழிக்கு வாரான் என்றைக்கும் திருந்த மாட்டான், ஸ்வாமி!

**ஸ்ரீராமர் வசனம் :** சரி! அப்படியா! சுக்ரீவா! அங்கதா! குமுதா! நீலா! நளா! நீங்கள் எல்லோரும் ஒவ்வொரு கோட்டை வாயிலிலும் ஒவ்வொருவராகத் தத்தம் சேனைகளுடன் காவல் புரிந்து கொள்ளுங்கள். மற்ற வானர சேனைகள் எல்லாம் லங்கைக் கோட்டைக்குள் நுழைந்து ஆங்காங்கே நெருப்பை அள்ளிவீசி லங்கையைக் கொளுத்துங்கள். நகரை அழியுங்கள். அகழிகளைத் தூர்த்து விடுங்கள்.

**24-வது தரு. பாட்டு.** (மாமணிசோ சிவகாம என்ற சந்தம்)
(அனுமன் ராவணயுத்தம்.)

சாதாரணக் குரங்கென்று நினைத்தென்முன்
சண்டைக்கு வந்தாயடா — ராமனின்
நிந்தைக்காளானாயடா — உனக்கும்
உண்டோ தைரியமடா
வாயுபகவானின் சேயனான அனுமானென்றறி வாயடா
ஏதடா குரங்கே தூதாகவந்தெமகிங்கரரை யழித்தாய் - தேடும்போ
தெங்கே ஓடி ஒளித்தாய் — இப்போ என்
நேரில் சமர் தொடுத்தாய்
இக்ஷணமே எமலோக மனுப்புவேன் யாரென்றெனை நினைத்தாய்
வில்லம்பெடுத்து மிரட்டாதடா உந்தன் வீரத்தை நானறிவேன் —
பத்துத்தலை ஒவ்வொன்றாய் நானறிவேன் — கள்ளக்கரம்
இருபதுந் தெரிவேன்
வெட்டி யகங்காரத்தாலேயே அற்பாயுள்பெற்றதையுந் தெரிவேன்
வீணாகத் துள்ளிக்குதிக்காதே குரங்கே வேடிக்கை செய்யாதே —
கண்டகண்ட தூஷணை வையாதே — அம்பின்குறி
வீரமும் பொய்யாதே
மண்டைப்புழு வுன்னையாட்டுதலா லின்று சண்டைக்கு வந்தாயே
கைக்குத்துச் சண்டைக்கு வந்திதோ பாரடா காதக ராவணனே —
எந்தனின் சாமர்த்தியம் முனமே — அறிந்திருப்
பாயென்று நம்பினேனே — அடே

45

சண்டாளா பஞ்சமா பாதகா இக்குத்தைத் தாங்கடா நீ முனமே
மார்பில் பதிந்த எட்டானைக் கொம்புவெளி வந்து விழுந்ததடா —
ராவணு தெம்பு முறிந்ததடா — ராமனை
நம்பித் துதிப்பாயடா — இந்த
நாளிலும் அன்னவர் பாதந்தொழுதாலே நன்றே நீ வாழ்வாயடா
எக்கச் சக்கமான காலத்திலே வந்து எந்தனெதிர்ப் பட்டாய் —
குரங்கே போரிற் தலைப்பட்டாய் — முத்துவீரன்
சொல்லிற் தடைப் பட்டாய்
இப்பொழுதுந்தனை எற்றிவிட்டுத் தூக்கிமேலெறியப் பட்டாய்.

**அனுமன் வசனம்:** அடே! ராவணகாதகா! இதோ உன் மார்பில் பதிந்திருந்த அந்த எட்டானைக் கொம்புகளையும் உதிர்த்து விட்டேன் பார்த்தாயடா. இனி நீ வாழ்வாயோ? இதிலிருந்து பார்த்துக் கொள்ளடா! எங்கள் புஜபல பராக்கிரமத்தை!

**பொது கொச்சகம்.**

அனுமன்சுக் ரீவன்லட்சு மணனுடனும் வானரங்கள்
கனசமரே புரியுமப்போ கைக்குத்தால் மார்பினுள்ளே
முனம்பதிந் திருந்தயானைக் கொம்பெட்டுங் கீழ்விழவே
அனற்பொறி பரக்காராவ ணன்வேலை வீசினனே.
இளையபெரு மாள்வேலுக் காற்றாது மூர்ச்சித்த
களைதீர்க்க ராமன்பால் கலக்கமுடன் கொணானுமன்
குழைவீசித் தேற்றினபின் கடுங்கோபங் கொண்டுராமன்
மழையெனவே பொழிசரமே வார்க்கசமர்க் கேகினனே.

**25-வது தரு. பாட்டு.** (செந்தின்மாநகர் என்ற சந்தம்)
(இராம ராவண யுத்தம்)

கொஞ்சமும் நெஞ்சில் அஞ்சுதலில்லாமல்
கொண்டாய் சீதை சிறைமேலே — அடே
பஞ்சம பாதகா உன்பாலே — இனி
ஈவிரக்கம் எள்ளத்தனையுமுன்
பேரில்வைப்பது நீதியல்லவே
இச்சணம் அரக்க இனத்தவரெல்லாமே
ஏகுவாருன்னால் ஏமலோகமே — சாகும்

நாய்க்குக் கடல்நீர் முழங்காலாமே — அட
நாசகாதச ராவண இதுநேரமே
பதிலோது வாயடா
சித்தெறும்பன்ன சிறிய மனிதப்பயல்
சின்னக்கொசுகு போன்ற ராமனே — எந்தன்
சுண்டுவிரற் கிணையோ நீயனே — இந்தத்
தீரமாமகா மேரு என்னிடம்
சிறிவருகுதல் கேலி தானடா
சிந்தனைசெய்து பாராமலே என்னை
போருக்கழைக்குறாய் நீயே — என்போ
லுள்ளோரெனைக் கேலி செய்வாரே — அடே
அடவியதில் வருவிலங்கு பறவைக
ளதனைச் சரம்விடுத் தழிக்குஞ் சிறியவன்
வஞ்சகங்கொண்ட நெஞ்சினை என்பாணம்
வாட்டிடுமே தாங்குவாயோ — பதில்
பூட்டாமலே ஏங்கு வாயோ — இம்
மாநிலத்தினில் நீதிநாட்டவே
வந்தடுத்தனம் சிந்திப்பாயடா
சாரதி தலைகொய்திட்டேன் பாரடா
தனுசுபத்தும் பொடியாச்சடா — அரக்க
பதரே யுன்மானம் மண்ணில் போச்சடா — இந்தச்
சரத்தினலுந்தன் கிரீடமத்தனை
உருட்டினேன் படை திரட்டிப்பாரடா.

**இராவணன் வசனம்:** ஐயோ! எனது இருநூறு வெள்ளம் சேனைகளும் மடிந்தனவே. என் சாரதியும் செத்தானே! தேருந்தகர்ந்து என்னுடைய பத்துவிற்களையும் ஒடித்தெறிந்து விட்டானே! கிரீடங்களையும் மண்ணில் உருட்டி விட்டான். இவனைச் சாதாரண மனிதனென் றல்லவோ நினைத்திருந்தேன். சீதையினிடம் டம்பம் பேசினேனே! என்ன செய்வது என்று எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே!

**இராமர் விருத்தம்.**

போருக்கு வந்தாய் தோற்றுப் போனாய் ராவணனே நிலமேன்
கிறுகிறாய் மவுனம் என்ன கீர்த்தியும் புகழெல்லாம் எங்கே
பாரடாநீ நாளைக் குந்தன் பலமெல் லாங்கொண்டு வாடா
சீறியே முன்னம் வந்த திரமெல் லாம்எங்கே மூடா.

47

**இராமர் வசனம் :** இராவண ராட்சத முழுமூடா! உன் சேனையெங்கே? வில் கணைகள் எங்கே? தேர்சாரதி யெல்லாம் எங்கே? மகுடமெல்லாம் எங்கே? குனிந்துகொண்டு என்ன யோசனையடா செய்துகொண்டு இருக்கின்றாய்? இன்று உன்னால் சண்டைசெய்ய முடியாது. நாளைக்கு வாடா! போடா! உன்னுடைய சேனைசைன்யங்கள் அத்தனையும் ஒருங்கே கொண்டு வாடா! போடா! ராவணத் திரும்பே!

**26-ஆம் தரு. பாட்டு.** (வந்தேமாதாமென்போம்)

ராவணனே அந்த ராமன் — சிறு
பாலனென்றெண்ணாதே
படுதோல்வி யடைவாய்
அரக்கர் குலத்தினை அழிக்கக் — கையில்
பெருக்கக் கங்கணங்கட்டி வந்தான் சிறக்க
வருக்கமெல்லாம் நாசங்கண்டாய் — எந்தன்
வார்த்தை கேட்டாலே மகிழ்ச்சி நீ கொண்டாய்
அப்போ மகோதரன் பார்த்தான் — எந்தன்
அன்பான ராவண ஈஸ்வரா கேட்பாய்
மாலியவான் சொற்கேளாதே — அவன்
மயக்க வார்த்தை தன்னில் ஈடுபடாதே
நமக்கு மூலபலம் உண்டு — அதனால்
நமக்கு நிச்சயமே இனிச்ஜெயம் உண்டு
கும்பகர்ணன் தூங்குரானே — அவனை
நம்பி எழுப்பினால் நம்வெற்றிதானே
உடனே அதற்கு முயற்சி — செய்து
பார்த்திடுவோம் மூலபலமதன் சக்தி
கிங்கரர்கள் ஒருங்கு கூடி — இரும்பு
உலக்கைகளின் உதவிகொண்டுமே மோதி
யானை குதிரையும் மிதிக்க — கும்ப
கர்ணனை எழுப்பிக்கறிமாம்சம் புசிக்க
நடந்தது சொல்லவும் கும்ப — கர்ணன்
விடந்தனைப் பருகுதல் போலவேயண்ணு
ராமனின் பகைமையே ஆகா — இது
நாட்டினுக்கே பொல்லா நாசமேயாகும்
என்றலும் ராவணன் சீறி — நோக
இன்றே சமர்செய்ய ஏகுவேனென்றும்

முன்னே உனக்கிடம் அங்கே — கண்டு
அண்ணாவே வைக்கிறேன்என்று அகன்றான்
தண்டமிழால் முத்துவீரன் — சொன்ன
பண்டு நிலையாய்ந்து பாருமாதாரம்.

**கும்பகர்ணன் வசனம் :** அண்ணா! முன்னே ஒரு குரங்காலே இலங்கை முழுதும் சுடுகாடு ஆச்சுது! அதுபோன்ற குரங்குகள் எழுபது வெள்ளம் இன்னும் அந்த ராமனிடம் இருக்கின்றனவாம். ஆதலால் வேண்டாம் அண்ணா! என்மேல் நீகோபிப்பதற்காக இப்பொழுதே நான் என்கடமையைச் செலுத்த யுத்தகளம் செல்லுகின்றேன். வருவது அபஜெயந்தான் அண்ணா!

**(கும்பகர்ணன் தேரேறி தனது சேனைகளுடன் யுத்தம் செய்ய புறப்படுகின்றான்.)**

**27-வது தரு. பாட்டு.** (பாங்கதா என்ற சந்தம்.)

சாமியே கும்பகர்ணன் வாரானே போருக்கின்று பாரும் – சித்தந்தேறும்
ராவணனுக்கிளையோன் — தானெனக்கு முதல்வன்
சூலஞ்சிவனிடம் பெற்றானே — தேர்வுற்றானே
ஆறுதிங்கள் உறக்கம் ஆறுதிங்கள் விழிப்புமானான் — ஏமாந்துபோனான்
ஆனதினாலிவனும் தூங்கா திருந்திடிலோ
தாங்காதுலகம் இவன் போக்கே — துயர்நீக்கே
சீதையை விடச்சொல்லி ஓதினான் நீதிபலதானே — கோபித்தானே
ஏதுகாரணத்தாலோ வாரான் நம்முன்னம் இன்று
போருக்கோ என்னென்றறியேனே — சாமிநானே
கும்பகர்ணனைக் கவிக்கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும் - உத்தரம் [வேண்டும்
என்ற சுக்ரீவனுக்கு அந்தரங்கந் தெரியச்
சொல்லி விபீஷணனை நேரே — அனுப்பினாரே
ஏசியெல்லோர் நகைக்க இடந்தரும் ஆதலாலே நீயே — கேட்பாயே
ஏமனிருக்க எதிர்சாமியிருக்க — விதி
காலத்தில் கூடிநிற்பதாலே — ஆதலாலே
என்ற பின்னர் சுக்ரீவன் அங்கதன் நீலனே எல்லோரும் — செய்தார் [போரும்
எதிர்த்து லட்சுமணனும் ரதத்தையழிக்கச் சுக்ரீ
வனைச் சூலத்தாலே தாக்கினானே — சினந்தானே
கைப்பிடியாகச் சுக்ரீவன் தன்னைத்தூக்கியே போனானே—லங்கைதானே

49

ஈதையறிந்த ஜெயராமனும் சரக்கூடம்
ஏற்றி நெற்றியைப் பிளந்தாரே — மகிழ்ந்தாரே
போரிட்ட கும்பகர்ணன் ராமபாணமே பட்டுப்பாய்ந்தான் — உயிர்மாய்ந்
ஆதலின் தலைகடல் போய்விழும் வரம்வேண்டி [தான்
னது போலேயதும் ஆச்சு — துயர்போச்சு.

**பொது கொச்சகம்.**

பொய்யாக ஜனகன் தன்னைப் பின்கட்டாய்க் கட்டி வந்து
மைதிலியின் முன்னே விட்டு மணம்புரிந்து வாழ்வா யென்ற
செய்கையை நம்பி டாமல் சீதைரா வணனைக் கடிந்து
வையுமப்போ கும்ப கர்ணன் மடிந்தானென் றறிவித் தாரே
ஐயகோ கும்ப கர்ணு அப்பாதென் சமுத்தி ரத்தில்
பையநீ ராடி னல்கால் வடமேரு தனில் தேய்ப்பாய்
பையனு லிறந்த தெண்ணப் பற்றிடுதே மேனி என்று
துய்யனு மதிக னைப்போர்த் துரைக்க னுப்பிவைத் தானே.

**பொது வசனம் :** உயுத்தத்திற்குச்சென்ற, இராவணன் இளைய குமாரனுன அதிகாயனையும், அவனது சேனு சைன்யங்களையும்பற்றி, விபீஷணரால் அவனது பெருமையைக் கேள்விப்பட்ட லட்சுமணர் எழுந்து, உயுத்தம்புரிந்து, அதிகாயனையும், அவனது சேனைகளையும் மடித்துவிட்டார். இதையறிந்த இராவணேஸ்வரன், அதிகாயன் இறந்ததுபற்றி அழுதுபுலம்பியதைக் கேள்விப்பட்ட, இராவணேஸ்வரன் குமாரனுன இந்திரஜித்து என்பவன், வீராவேசத்துடன் பகைவரைத் தொலைக்கிறேனென்று உயுத்தத்திற்குப் புறப்படுகின்றுன்.

(அனுமன் லட்சுமணப்பெருமாள் இந்திரஜித்து முதலியவர்களுடன் கடும்போர் நடைபெறுகிறது.)

**28-வது தரு. பாட்டு** (வனக்கிளியே உனக்கினிய)

வனக்குரங்கே உனைத்தொலைத்து மகிழ்ச்சிபெறுவேனே
மனக்குறையை அகற்றிடவே
நரப்பயல்கள் உயிர்ப்பலியே
இந்திரனை ஜெயித்ததனல் இருமாப்போ கொண்டாய்
எதிர்த்து வந்திடு முனைமடித்துமே
நரிக்கழுக் களுக்கிரை புகுத்துவேன்

இளையபெருமாளை நீயும் லேசென்றெண்ணாதேயடா
இந்திரஜித்துவுன் மாயமந்திரம்
எல்லாந்தெரிவோம் துள்ளாதடா நீ
ஊரைக் கொழுத்திச் சாம்பலாக்கி ஓடிவிட்ட குரங்கே
ஒழித்து முந்தனின் கவிக் குழுக்களை
மடித்திடச்செய்து மகிழ்ச்சியடைவேன்
மின்னலிடிபோல் சரங்கள்மாரி மிகுந்து துளைக்கும் காட்சி
வேதனைக்கடன் கொண்டவர்மன
நிலைக்குகந்த அத்தாட்சி
அஷ்டதிக்கும் செவிடுபட அல்லோல கல்லோலம்
அடித்துவிழுந்து புரண்டுருண்டு
அழுகை திரண்ட ஓலம்.

**பொது வசனம் :** இந்த மாதிரி அனுமன் இளையபெருமாள் இந்திரஜித்து முதலியவர்களுக்குக் கடும்போர் நடந்து கொண்டிருக்கிறது. திடீரென்று லட்சுமணப்பெருமாள்மீது நாகாஸ்திரம் பிரயோகிக்கின்றான் இந்திரஜித். அந்த சமயம்

**பொது விருத்தம்.**

தீரமுடன் இந்திரஜித்தன் நாகபாணம்
தெறித்தபோது லக்குவனும் அனுமனோரும்
சேரோருங்கே மூர்ச்சித்துக் கீழ்விழுந்த
செய்திகேட்டு ரகுராமன் துக்கமோடே
கோரமுடன் அழுததாற் கெருடனாலே
குளிர்காற்றுப் பட்டிடவே எல்லோரும்
ஆர்வமொடு எழுந்துபின்னும் போர்செய்தார்
அண்டாண்டம் செவிடுபட ரணகளத்தே.

**பொது வசனம் :** இந்திரஜித்துவுடன், மறுபடியும் இளையபெருமாள் போர் செய்து, அவன் விடுத்த பிரமாஸ்த்திரத்தால் கட்டுப்படவும், அதைப்பார்த்து, ஸ்ரீராமர் முதலிய சேனை சைன்யங்களெல்லாம், அழுது புலம்பி எல்லோரும் மூர்ச்சித்திட, அந்த சமயம் ராம லட்சுமணர்கள் இறந்தாரென்று அரக்கிகளால் கேள்விப்பட்ட சீதை அய்யோ நாதா என்று பலவாறு சொல்லித் துக்கித்துப் புலம்பும்போது, திரிச்சடையானவள் அம்மா ! இது அரக்கர்கள் செய்யும் மாயை, ராம லெட்சுமணர்

இறந்தாரென்று சொல்வதை நம்பாதீர்கள் என்று சொல்லிச் சீதைக்கு ஆறுதல்கூறித் தேற்றிக் கொண்டிருக்கும்போது பிரமாஸ்த்திரத்தால் கட்டுண்ட, ராம லட்சுமணுதியரை மூர்ச்சை தெளிவிக்க, சாம்பவந்தர் சொற்படி, அனுமார் சஞ்சீவிமலை கொண்டுவர, எல்லோரும் மூர்ச்சை தெளிந்து எழுந்திருக்கின்ருர்கள். எழுந்த உடனேயே,

### கொச்சகம்.

கொள்ளியுங் கையுமாகக் குரங்குகள் லங்கையுள்
துள்ளியே ஏழுசுற்றுக் கோட்டையைச் சுற்றியாடி
அள்ளுதீக் கொளுத்தலாலே அரக்கர்பெண் கள்தம்மோ
டுள்ளேயே சாம்பராக மண்ணிற்கே உரமதானுர்.

**பொது வசனம் :** நிகும்பலையாகத்தால் இராமனுதியரைத் தொலைத்து விடுவதாகச் சொல்லிச்சென்ற இந்திரஜித்தன், மாயா சீதையை உண்டாக்கி அவளை வெட்டுவதாகவும், அயோத்தி சென்று அங்குள்ளவர்களையும் கொன்றுவிட்டு அயோத்தியையும் சுட்டெரித்து விட்டு வருவதாகவும் சொன்னதை அனுமார் கேட்டுவந்து ராம லட்சுமண ரிடம் அழுதுபுலம்ப ராமர் சீதையை நினைந்து அழுகவும், லட்சுமணன் அவரைத் தேற்றி விபீஷணனை ஒருவண்டுருவெடுத்து அசோகவனம் போய் சீதையைப் பார்த்து வரும்படி சொல்லியனுப்பி, பார்த்து வந்த பின்பு அது பொய்யென்று அறிந்துகொண்ட பின்பு, இந்திரஜித்தன் செய்யும் நிகும்பலையாகம் நிறைவேறும்படி விடக்கூடாதென்று சொன்ன விபீஷணர் சொற்படி அனுமாரும் இளையபெருமாளும் ராமரின் கட்டளை யின்பேரில் இந்திரஜித்து செய்யும் நிகும்பலையாகசாலை நோக்கிச் செல்லு கின்ருர்கள்.

(இந்திரஜித்து லட்சுமணர் யுத்தம்)

### 29-வது தரு. பாட்டு. (கிளிக்கண்ணி சந்தம்)

இந்திரஜித்தரக்கா இன்றுநீ தப்பித்தோடி
வந்துநீ யாகம் செய்து — பிழைக்க
வழிதேடு கின்ருயடா
இப்படி நீபிழைக்க எண்ணங்கொண்டாயோ மூடா
தப்பவிட மாட்டேனே — திருடா
சல்தியில் வெளியே வாடா

சிவபூஜை வேளையிலே காடிவிட்டாட்டுமாப் போல்
தவச்சாலைக்குள்ளே வந்தாய் — குரங்கே
தடுமாற்றமே புரிந்தாய்
விடுத்த பிரமாஸ்த் திரத்தில் வீழ்ந்த நீவந்திட்டாயோ
தொடுத்த தெய்வ பூஜையை — ஏண்டா
கெடுத்தனையே குரங்கே
திரும்பியே ஓடிவந்து நிகும்பலையாகம் செய்தால்
அரும்புமுன் வாழ்வும் என்றே — திருடா
நினைந்து நீ வந்தாயடா
லச்சை கொள்ளாமல் பிர்ம அஸ்த்திரத்தாலேதப்பி
லட்சுமணப் பயலே — வந்தாய்
நாசகாலமோ அடா
போடுரேன் நீ தடுப்பாய் புல்லனே இந்திரஜித்தா
நீடும் மாயவன் சரம் — தொடுத்தேன்
நீ தப்ப மார்க்கமுண்டோ
அக்கினி பாணமடா தப்பவும் மார்க்கமுண்டோ
லட்சுமணப் பாதகா — நரனே
இச்சணம் மாய்வாயடா
சாரதியும் தேருடன் தவிடுபொடி யாச்சடா
வீரமும் எங்கேயடா — அரக்கா
வீண் ஜம்பம் பேசாதடா
ஆகா இதென்ன விந்தை அடுத்தடுத்தேவும் பாணம்
நோகாது தாக்கின்றனே — என்னால்
ஆகாது போரேசெய்ய
தொல்லை இதுநமக்கு நல்லவேளையே இல்லை
நில்லாது ஓடிப்போவேன் — நானே
மல்லாடலாகா தின்றே
ஓட்டமாயிந்திரஜித்தன் ஓடிராவணன் முன்னே
கேட்டையோ தந்தையரே — நான்பட்ட
பாட்டையும் என்ன சொல்வேன்
பெரிய அவஸ்தைப் பட்டேன் போர்செய்யலாகா தென்னால்
சிறியவனென் றெண்ணினேன் — அவனே
இறைவனைப் போல் காணுறான்
என்று சொன்னவுடனே ஏசிப்பேசி ராவணன்
உன்திறம் இதுதானடா —நீபோய்
இரண்டிலொன்று பாரடா.

**இராவணன் வசனம்:** அடா! மகனே! இந்திரஜித்து! புலிக்குப் பிறந்தும் நகம் இல்லை என்பதுபோல, தைரியத்தை விட்டல்லவோ என்னிடம் பேசுகின்றாய்! நீ யாருடைய மகன் என்பது ஞாபகமிருக்கட்டும்! நீ செத்தால் என்பலம் போச்சோ! அல்லது என்குலம் போச்சோ! போ. இரண்டிலொன்று பார்த்துவிடு.

**விருத்தம்.**

ராவணன் சொல்லைக் கேட்டு மீண்டுமே இந்த்ர ஜித்தன்
போயவன் கடுமை யாகப் போரினைச் செய்யும் போது
மேவுலச் சுமணன் விடுத்த விற்சரம் அவன்சி ரத்தைத்
தாவியே யறுத்த தாலே தன்னுயிர் மாய்ந்தா னன்றே.

**பொது வசனம்:** இந்திரஜெயித்தன் இறந்தானெனக் கேள்விப்பட்ட இராவணனும், மண்டோதரியும் அழுது புலம்புகிறார்கள். உடனே சீதையிடம் ஓடி, இவளாலே தானே இந்தத் துன்பமெல்லாம் நேர்ந்ததென்று சீதையை வெட்டிவிடத் துணியும்போது மகோதர மந்திரி இராவணனைத்தடுத்து எய்தவன் இருக்க அம்பை நோகலாமா! இது கூடாது. நீ போருக்குச் சென்று ராமனைக் கொன்று வெற்றியுடன் திரும்பிவந்தால், நீ மனம்போல் அடையக் காத்திருந்தபடி பின்பு யாரை அடைவாய்? அதனால் வேண்டாம்! என்று சொல்லவும், மூலபலத்தையேவிச் சண்டைசெய்து வரும்படியாகச் சொல்ல, அந்தச் சேனைகளெல்லாம் சென்று மடிந்தனகண்ட இராவணேஸ்வரன் தானே யுத்தத்திற்குப் புறப்படுகின்றான்.

(இராம—ராவண யுத்தம்.)

**30-ஆவது தரு. பாட்டு.** (பூமிமெச்சிடும் என்ற சந்தம்.)

ராவணா துராத்மக் காதகா போருக்கு வந்தையோ
மேனி நொந்தையோ கண்டொளிந்தையோ—இந்த
நாளில்மனத்தைரிய மாகவே சைன்யமுங் கொண்டையோ
—வெற்றி கண்டையோ

மூலபலமெல்லாம் நாசமெனக் கண்டும் மோதினாய்
வந்துமோதினாய் ஜம்பம் ஓதினாய்—இங்கு
மாண்டார் கோடிகோடி என்றே தெரிந்தும் நீ சாடினாய்
—ஏண்டா வாடினாய்

நெஞ்சிலகங்காரங்கொண்ட நரப்பயல் ராமனே
சின்ன ராமனே பொடிப்பாலனே—இதோ
நான்விடும் பாணத்தைத் தாங்கும் வல்லமையுண்டோ பாதகா
—அடே காதகா
இப்பொழுதாகிலும் சீதையை என்னிடம் ஒப்பித்தால்
நீயும் தப்பிப்பாய் நீயோசித்துப்பார்—என்றும்
நீண்ட ஆயுளுடன் ஆண்டனுபவித்து நீவாழுவாய்
—புவி யாழுவாய்
சாமான்ய மானவோர் மானுடப்பயலுக்குப் பயந்தவன்
நானோ அயர்ந்தவன் உன்னில் உயர்ந்தவன்—இது
வாய்வேதாந்தம் அல்ல வீரமரக்குடி வந்தவன்
—நான் துணிந்தவன்
விட்டுக்கொடுத்திட்டு மீண்டும் அடைவதெங் குலமல்ல
வேத நலமல்ல புறமுதுகல்ல—நாங்கள்
காட்டி ஓடமாட்டோம் தாட்டீக நெஞ்சுரங் கொண்டவன்
—வெற்றி கண்டவன்
கீழ்விழுந்தும் மீசை மண்ணொட்ட விலையெனப் பேசுறாய்
துள்ளி ஏசுறாய் கைகள் வீசுறாய்—அப
கீர்த்தி வருவதை நீயும் யோசித்திடாப் பேசுறாய்
—போரிற் கூசுறாய்
திரிசூலம் வருதுவுன் சிரமதைக் கொய்யவே ராமனே
சிறுபாலனே பிழைப்பாயினே—தப்பி
யோடிப் பிழைத்துக்கொள் உன்குலம் முழுதுக்கும் வாழ்வதே
—நல்ல வாழ்வதே
பத்துத்தலைகளும் கொத்தாகக் கீழ்விழப் பாணமே
தொடுத்தேன் மானமே போச்சு நீமுனே—கொண்ட
வாய்வீச்சு மண்ணிலே புதைந்துருளப் போறாய் மூடனே
—குடி கேடனே
ஒத்தைத் தலைராமா சித்துவிளையாட்டு அறிகுவேன்
பல தெரிகுவேன் விஷயம் புரிகுவேன்—நித்தம்
முத்துவீரன் கவிப்பாமாலை வீரத்தின் பாணமே
—அறிவாய் இன்னே
ராவணனே பிரமாஸ்திரந் தொட்டேன் நீசாயவே
ஆட்சி ஒயவே உயிர்மாயவே—இந்த
நாள்முதல் சோதரனை விபீஷணன் ஆட்சியே
—கொள்ளத்தாட்சியே

**பொது வசனம்:** இராவணேஸ்வரன் மாள்கின்றான். விபீஷணன் புலம்புகின்றான். மண்டோதரி அழுகின்றாள். தீப்புகுந்து வீரசொர்க்கம் பெறுகின்றாள். லட்சுமணரால் விபீஷணப் பட்டாபிஷேகம் நடைபெறு கிறது. அனுமன் மூலமாக சீதாபிராட்டியாரை அழைத்து வருகிறார்கள். சீதையின் அலங்காரங்கண்டு ராமர் கடிந்துபேச, லட்சுமணரால் மூட்டப் பெற்ற அக்கினி குளித்து எழுகின்றாள் சீதை. விமானமேறி அயோத்தி புறப்படுகின்றார்கள் எல்லோரும். வரும் வழியில் பரத்வாசர் ஆசிரமத்தில் இறங்கி எல்லோரும் விருந்துண்கின்றார்கள். பின்னர் அனுமனால் ராம லெட்சுமணர் வருகை தெரிந்த பரதன் முதலானோரும் அயோத்தி நகர மக்களும், சந்தோஷ ஆரவாரத்துடன் இருக்கின்றார்கள். பரத்துவாச ரிடம் விடைபெற்றுக்கொண்டு சீதா ராம லட்சுமண, சுக்ரீவ விபீஷண குக சமேதராகப் புஷ்பக விமானம் அயோத்தி சேருகிறது. எல்லோரும் வணங்குதல் காட்சி நடைபெறுகின்றது. தவவேடம்மாற்றி அரண்மனைப் பிரவேசம் செய்கிறார்கள். ஸ்ரீராம மகுடாபிஷேகத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. குறித்தவோர் சுபயோக சுபதினத்தில் சகலரும் புடைசூழ மங்கள வாத்யங்கள் முழங்க வதிஷ்டர் ஸ்ரீராமருக்கு மணிமுடி புனைகிறார்.

### பாட்டு — மங்களம்.

சீர்மேவ யோத்திதச ரதராஜ பாலகராய்
ஜெனித்து ஸ்ரீராம லக்வர் முனிவருடனே
சென்றுதவ வேள்விதனைக் காத்துமே ரட்சித்த
சிராம னைதிட தீரருக்கே.
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.
தாடகை சுபாகுவைச் சங்கரித்து மாரீசன்
பங்கமா யோடவே பாணம் விடுத்து
நீடுமிதுலைச் சனகனீன்ற ஜானகி தன்னை
நெடித்து மணம்பெறு நீல வண்ணனுக்கே
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.
பின்தொடர்ந்த லக்குவன் பிரிய ஜானகியுடனும்
பெருதந்தை வாக்யபரி பாலனஞ் செய்ய
முன்னமே வனஞ்சென்று பதினாலு வருடமும்
முடித்து சுபமாகவந்த முதல்வனுக்கே
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

மண்ணிலே அக்ரமம் மறையவும் நீதியை
மகிழ்வாக நிலைநாட்டி வைத்த நீதன்
கண்ணான ஜானகியைக் கடல்தாண்டி விடுவித்த
கங்கணக் கோதண்ட ராமருக்கே
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

துஷ்ட நிக்ரஹம்செய்த சிஷ்ட பரிபாலனன்
துன்மார்க்க ரழியவே விண்ணோர் புகழ்
தூயனுந் திருமுடியும் புனைந்த ரகுபதியான
சுந்தர ஜெயராம சுகுணனுக்கே
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

கண்மூடித் தனமெல்லாம் மண்மூடி யமிழ்ந்துமே
காசினியில் சீரோங்கித் திருத்த முறவே
மண்ணரசு நேர்மையொடு மக்கள் மதிப்புக்கு
வாகாயுயர்ந்திட மதி யோங்கவே
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

மதபேத நிறபேத மானுட பேதமெனும்
மட்டரகமான மதி போ யொழிகவே
சுகபோகமோடு தமிழ் வளர்கவும் சுயநாடு
சூழ்ச்சியின் கரமீண்டு துலங்கியொளிர
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

அடிமையாண்டா னென்ற அகங்காரம் நசியவே
அறிவு காலத்திற்கும் பொருந் திடாத
ஆமிக் கதைமிடிதன் ஆட்டச் சுழற்சியால்
அல்லல் நீக்கிடத்துணிந்து அறைதலாலே
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

தாலமெல்லாம் புகழ் சோழவள நாட்டினில்
தண் காவிரி நதியின் வடகரையிலே
சீலராம் கம்பள குலோத்தமர்கள் வாழ்ந்திடும்
செல்வ தொட்டியபட்டி சீரோங்கவே
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

கற்றோர்கள் நேசனும் கவிஞர் தம்பாசனும்
கவி முத்து வீரப்பன் விஸ்வாசனும்
சற்குண சீலனும் சாற்றுங் காமாநாய்க்கர்
தன்மனைவி மக்களுடன் வாழ்க வாழ்க
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

57

57

ஒயிற்கும்மி யாட்டத்தில் உயர்வான ஆசிரியர்
உறுபெயர் திருமலே சாமி யன்பால்
இருவரும் வேண்டியே எழுதிடச் சொன்னகதை
இப்புவி யிலச்சேற்று வளர இனிதே
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

ஒயிற்கும்மி யாட்டத்துக்குரிய பாலகர் வாழி
ஊராருஞ் சுற்ற முடனோங்கி வாழி
பதிப்பித்த ஸ்ரீ கணபதி அச்சகம் என்றும்
பல்லாண்டு பல்லாண்டு வாழி வாழி
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்.

**வாழ்த்து.**

நேரிசை வெண்பா.

சீலகாமா நாய்க்கர் திருமலே சாமியும்
தாலமதிற் பேரே தழைக்கவே — காலமிதில்
ராமகதை சூழ்நிலேயில் நான்பாட வொப்பினன்
சேமமுற்று வாழச் சிறந்து.

**இப்புத்தகம் கிடைக்குமிடம் :**

**P. திருமலேசாமி,**

**ஒயிற்கும்மி ஆசிரியர்,**

**தொட்டியபட்டி, ★ மு. புத்தூர் P. O.**

**திருச்சி Dt.,**

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 10 | மாசற்ற | மாசின்றி |
| 1 | 11 | பாமாலை தந்துவப்பாள் | ஆமா றருள்வாளணிந்து |
| 1 | 13 | இறைவன் வழிபாடு | இறை வழி பாடுகள் |
| 1 | 15 | யாமிருப்ப | கேட்டுநற் |
| 1 | 26 | க்காதையைத் - தமிழால் | மாக்கதையைத் - தினம் |
| 7 | 15 | நமது | நம்சீர் |
| 7 | 16 | மனதே | நெஞ்சம் |
| 10 | 11 | சொற்றுறத்தால் | சொற்றுறந்தால் |
| 11 | 26 | தீயனையப் | தீயணையப் |
| 11 | 28 | சகுணம் | சகுனம் |
| 21 | 10 | நெடிக்குள்ளே | நொடிக்குள்ளே |
| 23 | 1 | ராவணன் | இராவணன் |
| 23 | 6 | அறுக்க்கப்பட்டு | அறுக்கப்பட்டு |
| 24 | 29 | இருவரும் | இவரும் |
| 25 | 17 | யணைத்துக் | யணைத்துத் |
| 26 | 4 | துனைத்திடுவேனே | துளைத்திடுவேனே |
| 28 | 12 | சொன்னதுபோல் | சொன்னதன்ன |
| 29 | 10 | இன்று | என்று |

59

59

# நான் பிணி வாய்ப்பட்டபோது உதவிய நன்கொடை அன்பர்கள்.

## கடத்தூர்.

ஜனப். K. S. அப்துல்வஹாப், அவர்கள்
,, K. S. சாந்து முகமது ,,
,, முகமது காசீம் ,,
,, K. S. அமீர் ராவுத்தர் ,,
திரு. P. முத்துச்சாமி நாயுடு ,,
,, K. R. வெங்கிட்டராம அய்யர் ,,
,, R. K. மாணிக்கம் பிள்ளை ,,
,, வ. பூ. மு. காளியப்பன் ,,
,, M. K. மருதமுத்து முத்துராஜா ,,
,, குருசாமி பண்டாரம் ,,
,, M. பெரியசாமி பண்டாரம் ,,
,, கிருஷ்ண பண்டாரம் ,,
,, N. முத்துசாமி நாயுடு ,,
,, K P. பேச்சிமுத்து, டெய்லர் ,,
,, S. இராமசாமி முத்துராஜா ,,
,, P. குப்புச்சாமி நாயுடு ,,
,, K. V. கவுண்டன்பூசாரி முத்துராஜா
,, மாரியப்ப களத்தில்வென்ரூர் (கோரிக்கடவு)
,, R. சுப்பிரமணிய செட்டியார், அவர்கள்
,, தன்னாசிக் கவுண்டர் ,,
,, த. க. கரும்ப கவுண்டர் ,,
திரு. K. பெரியசாமி காங்கிரஸ் ஒர்க்கர் ,, அலங்கியம்
,, சி. அ. வெ. பெருமாள் கண்டர் ,, அலங்கியம்
,, P. C. முத்துசாமி கவுண்டர் ,, பெரிச்சிபாளையம்
,, பழனிச்சாமி கவுண்டர் ,, கோட்டத்துறை
,, முதலாளி சீரங்க கண்டர் ,, அலங்கியம்
,, கோவிந்தசாமிக் கண்டர் ,, அலங்கியம்
,, A. V. கோபாலசாமி அய்யர் ,, அலங்கியம்
,, A. S வேலப்பா ,, அலங்கியம்
திரு. சித்திரம் பிள்ளை அவர்கள், அரியநாச்சிபாளையம்
,, மாசாண பண்டிதர் அவர்கள், கணியூர்
,, K. N. சண்முகசுந்திரம் ,, ,,
,, P. கருப்ப பிள்ளை அவர்கள் காங்கிரஸ் ஒர்க்கர் கணியூர்
,, பெரியண்ண முத்துராஜா அவர்கள் கணியூர்

## காரத்தொழுவு.

திரு. K R. கல்யாணவரதராஜ கவுண்டர் அவர்கள்
,, P. கருப்பண்ண பிள்ளை ,,
,, படுபலே பிள்ளை ,,

## ஆட்சியூர்.

திரு. A. மாசாணக் கண்டர் அவர்கள்
,, சி. ராமசாமிக் கண்டர் ,,
,, K. ராமசாமி கண்டர் ,,
,, S. துரைச்சாமி ,,
,, S. ஆறுமுகம் ,,
,, பேச்சிமுத்து ,,
,, K. லட்சுமணன் ,,
,, ஆறுமுகம் ,,
,, பெருமாள் கண்டர் ,, கா. புதூர்
,, சீரங்க கண்டர் ,, ,,
,, P. மாரியப்ப கண்டர் ,, ,,
,, வீரப்ப கண்டர் ,, ,,

முத்துராஜ வாலிபர் சங்கம், காட்டுப்புத்தூர்

திரு. K. C. காத்தான் முத்துராஜா, அவர்கள் ,,
,, K. S. முத்துமாரி முத்துராஜா ,, ,,
,, K. P. சின்னச்சாமி முத்துராஜா ,, ,,
,, K. M. தேக்கமுத்து முத்துராஜா ,, ,,
,, K. N. நீலமேகம் முத்துராஜா ,,
ஜாயிண்டு மிட்டாதாரர் ,
,, K. E. சேவுகன் முத்துராஜா ,, காடுபட்டி
,, K. E குப்பமுத்து முத்துராஜா ,, ,,
,, கா. பெ. முத்துச்சாமி முத்துராஜா , ,,
,, R. மருதை முத்துராஜா அவர்கள், ஸ்ரீராமசமுத்திரம்
,, நாராயணசாமி, பில்கலெக்டர், அரவக்குறிச்சி
,, S. M. கம்பளத்தான், சீனிவாசநல்லூர்
,, ஆ. சண்முக முத்துராஜா, ஒடுவந்தூர்

## தொட்டியம்.

திரு. சின்னதம்பி என்கிற மாரிமுத்து முத்துராஜா
,, R. ராமசாமி முத்துராஜா
,, மருதை முத்துராஜா
,, சின்னச்சாமி படையாச்சி
,, சின்னச்சாமி முத்துராஜா
,, கங்காணி என்கிற கோவிந்த முத்துராஜா
,, குப்புச்சாமி முத்துராஜா

அன்பன்,

**மே. நா. முத்துவீரப்ப முடிராஜ்,**
C/o. S. K. [illegible] முத்துராஜா,
சிலைப்பிள்ளையார்[illegible]த்தூர் P. O.
முசிரி Tk., திருச்சி Dt.

102118
MADRAS
0-,85
N52